Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 01, இதழ் : 29 சார்வரி வருடம், ஆடி மாதம் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை (31.07.2020) ஹிஜ்ரி - 1441 துல்ஹஜ் பிறை-09, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20

## தலையாய நகரில் தமிழைக் காணோம்

**'தமிழன்' வாசகரின் ஆதங்கம் இது!**



தமிழன் பத்திரிகையின் வாசகரும் சமூக சேவையாளருமான ஜெனிபர் பெர்னாண்டோ நேற்று, கொழும்பு பிரதேச செயலகத்தில் ஓர் அலுவலுக்காக சென்றதாகவும் அங்கு கண்ட காட்சியை விளக்கியும் ஆதங்கத்தை வெளியிட்டு...

02

**நக்கல்நமசிவாயம்**







# மஹிந்த அரசுக்கு சர்வதேச பொறி!

## காத்திருக்கிறதென்கிறார் விக்னேஸ்வரன்

### கூட்டமைப்பும் ராஜபக்ஷக்களும் டீல் எனவும் குற்றச்சாட்டு



• *நமது நிருபர்*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாக பொதுஜன பெரமுனவின் பிரமுகர்கள் சிலர் அண்மைக்காலமாக காட்டமான கருத்து தெரிவித்து வருவது ஒரு நாடகம். கூட்டமைப்பை பற்றி பெரமுனவும், பெரமுனவை பற்றி கூட்டமைப்பும் மாறிமாறி கருத்து தெரிவிப்பது, இரகசிய உடன்படிக்கையின் கீழேயே என தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன்.

02

## சர்வதேச சமூகத்திடம் நீதிகோரி வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டம்!



• *வவுனியா*

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் ஒன்றிணைந்து வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்றுக்காலை 10.30 மணியளவில் இலங்கையை சர்வதேச நீதிமன்றிற்கு பாரப்படுத்தக் கோரி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

சர்வதேசமே வீதியில் கண்ணீருடன் நாம் "எமக்கான நீதியை நாம் பெற...

02

## தமிழர் அரசியல் அபிலாஷைகள் நாசமாகிப் போய்விட்டன; சுயநிர்ணய உரிமை பெறும் வாய்ப்பை இழந்துவிட்டோம்!

### மன்னாரில் அமைச்சர் டக்ளஸ் அங்கலாய்ப்பு

• *மன்னார்*

கடந்த காலங்களில் சிலருடைய தவறான வழிநடத்தல், இல்லாத ஊருக்கு வழி காட்டுகின்றது போன்ற அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமையால்தான் எமது மக்கள் இவ்வளவு அவலங்கள் இழப்புகள் துன்பங்களை சந்திக்க வேண்டி வந்திருக்கின்றது. இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நேற்றுடன் கிட்டத்தட்ட 33 வருடங்கள். ஆனால் எங்களுடைய மக்களுடைய அபிலாசைகள் எல்லாம் நாசமாய் போய்விட்டன. அன்று அந்த இலங்கை-இந்திய ஒப்பந்ததை ஏற்று கொண்டு அதை சரிவர நடைமுறைப்படுத்தியிருந்தால் நாம் நடைமுறையிலே சுய நிர்ணய உரிமையை பெற்றிருக்கலாம் என ஈபிடிபி கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்லஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்



நேற்று வியாழக்கிழமை மன்னார் அடம்பன் பகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

02



பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர் அங்கொட லொக்கா, போதைப் பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் கழுகுடன் சந்தேகநபர்கள் இருவர் அத்துருகிரியவில் நேற்று கைது செய்யப்பட்டனர்.

## ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ள 113 உறுப்பினர்களது பெயர் விபரங்கள் வெளியாகின

### வடிவேலு சுரேஷ் உள்ளிட்ட 11 தமிழ், முஸ்லிம் உள்ளூராட்சி உறுப்பினர்களின் உறுப்புரிமை இரத்து

• *நா. தினுஷா*

முன்னாள் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் உள்ளிட்ட 11 தமிழ் மற்றும் முஸ்லிம் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமையை ஐக்கிய தேசியக் கட்சி நீக்கியிருந்தது. கட்சியிலிருந்து நீக்கப்பட்ட 113 உறுப்பினர்களின் பெயர் விபரத்தை நேற்று அந்தக் கட்சி வெளியிட்டிருந்தது.

02

## தரம் 1இல் மாணவர் அனுமதி எண்ணிக்கை அதிகரிப்பு

### சட்ட அங்கீகாரம் கிடைத்துள்ளதாக கல்வியமைச்சு தகவல்

தரம் 1 இற்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை 35 இலிருந்து 40 ஆக அதிகரிப்பதற்கு சட்ட அங்கீகாரம் கிடைத்திருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

உதவி ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளும் அடிப்படையில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அனுமதி கிடைத்திருப்பதாக கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களுடனான சந்திப்பின் போது இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், இந்த நடைமுறைக்கு அமைவாக தேர்தலுக்கு பின்னர் இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார்.

மாணவர்களின் ஆற்றல் மற்றும் திறன்கள் தொடர்பிலான தகவல்களை இலகுவாக அறிந்துகொள்ளக்கூடிய...

02

## ஐ.தே.க. வேட்பாளருக்காக சிறையிலிருந்து பிரசாரங்களை முன்னெடுக்கும் கைதி!

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஒருவருக்கான தேர்தல் பணிகளை, சிறைக்குள்ளிருக்கும் கைதி ஒருவர் தனது சகாக்கள் ஊடாக மேற்கொண்டு வருவதை சிறைச்சாலை அதிகாரிகள்...

02

## சமூக வலைத்தளங்களில் ஓகஸ்ட் 2 நள்ளிரவுடன் தேர்தல் பிரசாரங்களை தடை செய்யத் தீர்மானம்!




நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக சமூக வலைத்தள கணக்கு நிர்வாகிகளுடன் இன்று முதல் எதிர்வரும் 3ஆம் திகதிவரை தொடர் கலந்துரையாடலை நடத்த தேர்தல்...

02

## லங்காபுர பிரதேச செயலகத்தின் அதிகாரிக்கு கொரோனா தொற்று

லங்காபுர பிரதேச செயலகத்தின் அதிகாரியொருவருக்கு கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளதோடு, குறித்த அதிகாரி நோய்த்தொற்றுக்குள்ளாகியுள்ளார் என்பது பி.சி.ஆர். பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக...

02



| | | | | |
|---|---|---|---|---|
| அத கோட்டிபதி | 988 ஆவது வாரம் | 2020 ஜூலை 22ஆம் திகதி | ஆங்கில எழுத்து E | 10 40 50 51 |
| சனிதா வாசனா | 3342 ஆவது வாரம் | 2020 ஜூலை 25ஆம் திகதி | ஆங்கில எழுத்து Y | 14 26 59 66 |
| கோட்டிபதி கப்ருக | 603 ஆவது வாரம் | 2020 ஜூலை 26ஆம் திகதி | ஆங்கில எழுத்து W | 35 38 61 70 |
| அத கோட்டிபதி | 991 ஆவது வாரம் | 2020 ஜூலை 25ஆம் திகதி | ஆங்கில எழுத்து N | 15 32 50 55 |
| சுப்பர் போல் | 1181 ஆவது வாரம் | 2020 ஜூலை 25ஆம் திகதி | ஆங்கில எழுத்து D | 03 53 59 77 |
| அத கோட்டிபதி | 992 ஆவது வாரம் | 2020 ஜூலை 26ஆம் திகதி | ஆங்கில எழுத்து I | 15 37 61 72 |
| சுப்பர் போல் | 1182 ஆவது வாரம் | 2020 ஜூலை 26ஆம் திகதி | ஆங்கில எழுத்து C | 27 54 73 74 |
| அத கோட்டிபதி | 993ஆவது வாரம் | 2020 ஜூலை 27ஆம் திகதி | ஆங்கில எழுத்து C | 08 13 15 61 |
| சனிதா வாசனா | 3343 ஆவது வாரம் | 2020 ஜூலை 27ஆம் திகதி | ஆங்கில எழுத்து V | 07 33 37 60 |
| சுப்பர் போல் | 1183 ஆவது வாரம் | 2020 ஜூலை 27ஆம் திகதி | ஆங்கில எழுத்து O | 06 25 66 73 |
| அத கோட்டிபதி | 994 ஆவது வாரம் | 2020 ஜூலை 28ஆம் திகதி | ஆங்கில எழுத்து S | 17 41 71 72 |
| கோட்டிபதி கப்ருக | 604 ஆவது வாரம் | 2020 ஜூலை 28ஆம் திகதி | ஆங்கில எழுத்து E | 15 44 47 65 |
| அத கோட்டிபதி | 995 ஆவது வாரம் | 2020 ஜூலை 29ஆம் திகதி | ஆங்கில எழுத்து R | 20 24 38 46 |
| சனிதா வாசனா | 3344 ஆவது வாரம் | 2020 ஜூலை 29ஆம் திகதி | ஆங்கில எழுத்து B | 08 13 29 49 |

# ஐ.தே.க. விலிருந்து விலகி பொதுத்தேர்தலில் போட்டியிடுவோர் கட்சி உறுப்பினர்கள் அல்ல!

## ரணில் திட்டவட்டம்



கட்சியிலிருந்து விலகி பொதுத் தேர்தலில் போட்டியிடும் எவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்கள் இல்லை என்று தெரிவித்துள்ள அந்தக்கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு மாகாணங்களுக்கிடையிலான அதிகாரப்பகிர்வு அவசியமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு டொரின்டன் மாவத்தையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், குருநாகல் புவனேகபாகு மன்னனின் ராஜசபை உடைக்கப்பட்டுள்ளது. சிங்களத்துவம் தொடர்பில் பேசுபவர்களுக்கு நாட்டின் வரலாறும் பாரம்பரியமும் தெரியவில்லை. ஒருபுறம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சிறுபான்மை மக்களை ஓரங்கட்டி வருகிறது.

மறுபுறம் ஐக்கிய மக்கள் சக்தி என்று ஒரு கட்சி அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. ஆனால், அது ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளிக் கட்சி இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச்சென்ற அணி, ஒரு தனியான கட்சி என்பதை நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியினர் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராகவே செயற்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கும் கட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று தெரிவித்தார். இதேவேளை, நேற்று முன்தினம் கொழும்பு கோட்டையில் மக்கள் சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்த சந்திப்பில் கருத்து தெரிவிக்கையில், சிங்களம் தமிழ் என வேறுபாடின்றி சகல இனமக்களையும் ஐக்கியப்படுத்தி நாட்டை கட்டியெழுப்பும் நோக்கிலேயே ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கப்பட்டது. எந்த இனமக்களுக்கும் எந்த பாதகமும் ஏற்படாத வகையிலான தீர்மானங்களையே இதுவரைக்காலமும் எடுத்து வருகிறோம்.

நான் பிரதமராக இருந்த காலப்பகுதியில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தியபோது இந்த நாட்டில் சிங்கள மக்களே பெறும்பான்மையினர். எங்களுக்கு அந்த அதிகாரம் தேவையில்லை. அந்தந்த மாகாணங்களின் அபிவிருத்தி பணிகளை அந்தந்த பிரதேச மக்களே பார்த்துக்கொள்ளக்கூடிய வகையிலான அதிகாரப்பகிர்வை வழங்குமாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் என்னிடம் கோரிக்கை முன்வைத்திருந்தார். ஆகவே பௌத்த மதத்தின் முக்கியத்துவத்தை சகல மக்களும் இன்று புரிந்துகொண்டுள்ளனர். அதனடிப்படையிலேயே இனிவரும் காலங்களிலும் செயற்பட வேண்டும் என்று ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# திருமலையில் பாதுகாப்பு நடைமுறைகளுக்காக வாக்களிப்பு நிலையங்கள் அதிகரிப்பு

## அரச அதிபர் அசங்க அபேவர்தன தெரிவிப்பு



நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்துக்கான பெரும்பாலான ஏற்பாடுகள் நிறைவுபெற்றுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன தெரிவித்தார். 2019ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின்படி இத்தேர்தலில் மொத்தமாக 2,88,868 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். இதில் சேருவல தேர்தல் தொகுதியில் 80,912 வாக்காளர்களும், திருகோணமலை தொகுதியில் 97,065 வாக்காளர்களும், மூதூர் தொகுதியில் 1,10,891 வாக்காளர்களும் அடங்குவர். இவற்றுள் தபால்மூல வாக்காளர்கள் 15,200 பேர் குறிப்பிடத்தக்கது. நடைபெற்ற தபால்மூல வாக்குப்பதிவில் 14,907 வாக்காளர்கள் தம் வாக்குகளை பதிவுசெய்துள்ளனர். இது 98 சதவீத வாக்களிப்பை பிரதிபலிக்கின்றது.

மாவட்டத்தில் மொத்தமாக 307 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வாக்கெண்ணும் பணிகள் திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் நடைபெறும். 44 வாக்கெண்ணும் நிலையங்களில் வாக்கெண்ணும் பணிகள் நடைபெறவுள்ளன. இவற்றுள் 9 நிலையங்கள் தபால் வாக்கெண்ணும் நிலையங்களாக செயற்படும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மொத்தமாக 30 வாக்கெண்ணும் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொவிட்-19 வைரஸ் பாதுகாப்பு நடைமுறைகளை கருத்திற்கொண்டு சுகாதார நடைமுறைகளை பின்பற்றல் காரணமாக வாக்கெண்ணும் நிலையங்கள் கடந்த முறை தேர்தலைவிட இம்முறை அதிகரிக்கப்பட்டுள்ளன.

இற்றைவரை மாவட்ட தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுக்கு 128 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் அநேகமானவை பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அத்துடன், வாக்குப்பெட்டிகள் விநியோகம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி விபுலானந்தா கல்லூரியில் காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது.

சுமார் 5,000இற்கும் மேற்பட்ட அரச அதிகாரிகளும் ஒரு வாக்களிப்பு நிலையத்திற்கு இரு பொலிஸார் உட்பட பல பொலிஸ் உத்தியோகத்தர்களும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக திருகோணமலை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்தார்.

# தேர்தல் விதிமுறையை மீறிய நால்வர் பதுளையில் கைது

தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறி, பள்ளக்கட்டுவை நகரில் வேட்பாளரொருவரது காட்சிப் பதாதைகளை காட்சிப்படுத்திக் கொண்டிருந்த நான்கு இளைஞர்களை எல்ல பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன், அவர்கள் பயணித்த கெப் வாகனம் மற்றும் பெருமளவிலான பதாதைகள் ஆகியவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பதுளை மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரொருவரது காட்சிப் பதாதைகளை, காட்சிப்படுத்திக் கொண்டிருந்த நான்கு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டிருப்பவர்களாவர்.

கைதுசெய்யப்பட்ட குறித்த இளைஞர்களை, பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்களென்றும், எல்ல பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி குறித்த விதிமுறை மீறல் சம்பவம் தொடர்பாக 119 என்ற பொலிஸ் அவசர இலக்கத்திற்கு செய்யப்பட்ட புகாரையடுத்தே, குறித்த கைது மேற்கொள்ளப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

## சமூக வலைத்தள...

ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைகின்றன. ஆகையால், சகல சமூக வலைத்தளங்களும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொவிட்-19 நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளுக்கு ஏற்ப வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதால் மக்களை வாக்களிக்க செல்லுமாறு உற்சாகப்படுத்துதல், இளைஞர்களை வாக்களிக்குமாறு உற்சாகப்படுத்துதல் மற்றும் வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லும்போது கொவிட்-19 நோய்த்தொற்றை தடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள சுகாதார அறிவுறுத்தல்களை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்பது குறித்து சமூக வலைத்தளங்கள் மக்களுக்கு தேவையான தெளிவினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், சமூக வலைத்தளங்களின் செயற்பாட்டாளர்கள், யூரியூப் அலைவரிசைகளின் உரிமையாளர்கள், முகநூல் பக்கங்களின் நிர்வாகிகள் மற்றும் சகல சமூக வலைத்தள செயற்பாட்டாளர்களுக்கும் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## லங்காபுர....

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா நோய்த்தொற்றுக்குள்ளான இந்த அதிகாரியுடன் தொடர்பை பேணிய 50 பேர் இதுவரையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் குறித்த பிரதேசத்தில் அண்ணளவாக 200 பேர்வரையில் பி.சீ.ஆர். பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவருடன் தொடர்பைப் பேணியவர்கள் பொலநறுவை மற்றும் ஹிங்குராக்கொட பிரதேசத்தில் இருப்பதாக சுகாதார பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் கடந்த சில தினங்களாக அந்தப் பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையம், ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் வங்கி ஆகிய இடங்களுக்கு சென்றிருந்ததாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மேலும், ஒரு சில தினங்களுக்கு முன்னர் குறித்த நபர் அந்த பிரதேசத்தில் இடம்பெற்ற மரண வீடொன்றுக்கும் சென்றுள்ளார். இவை தொடர்பில் விசாரணைகள் நடக்கின்றன.

## தரம் 1இல் ....

வகையில் ஒவ்வொரு மாணவருக்கும் விசேட இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த விசேட இலக்கம் பாடசாலை கட்டமைப்புக்குள் கல்வி நடவடிக்கைகள் நிறைவடையும் வரையில் செல்லுபடியாகும் என்றும் கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்தார். விடுமுறை வழங்கப்பட்டுள்ள அரச பாடசாலைகள் அனைத்தும் 10 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க. ....

கண்டறிந்துள்ளனர்.

இந்த வேட்பாளரின் பிரசார செயற்பாடுகளை தனது ஆதரவு சகாக்கள் ஊடாக மேற்கொள்ளும் மேற்படி கைதி, ஒருகாலத்தில் குறிப்பிட்ட வேட்பாளருடன் நெருக்கமாக தொடர்பில் இருந்தவரென தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் இந்த கைதியை சந்திக்க வரும் நபர்கள் குறித்தும் சிறைச்சாலை அதிகாரிகள் கண்காணிப்பு செய்யத் தொடங்கியுள்ளதாக மேலும் அறியமுடிந்தது.

## தலையாய...

எமது ஆசிரிய பீடத்திற்கு தகவல் அனுப்பியிருந்தார். அதை அப்படியே தருகிறோம்...

***"ஐயா, ஆசிரியர் அவர்களே, கொழும்பு 12., பிரதேச செயலகத்தில் தமிழ் மொழிக்கு என்ன நடந்தது? இதுவரை காலமும் மும்மொழிகளிலும் எழுதப்பட்ட அறிவித்தல் யாவும் இப்போது தனிச்சிங்களமயமாக காட்சியளிக்கின்றனவே. உடனே இன்று பிரதேச செயலகத்திடம் எனது ஆட்சேபனையை தெரிவித்து எழுத்து மூலமாக எனது முறைப்பாட்டை கொடுத்துள்ளேன். கொழும்பில் இயங்கும் இரண்டு பிரதேச செயலகத்தில் [கொழும்பு மத்தி பிரசே செயலகம் - டாம் வீதி, கொழும்பு கிழக்கு - மேற்கு பிரதேச செயலகம் - திம்பிரிகஸ்யாய] தமிழ் மொழியில் கருமமாற்றமுடியும். ஏன் இந்த பாரபட்சமான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது புதிராக உள்ளது. உடன் மாற்றம் செய்து தமிழ்மொழியும் இடம்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் நானாகவே தமிழ் எழுத்து எழுத வேண்டி வரும். உரியவர்களிடம் சொல்வது உங்கள் கடமை"***



என்று தெரிவித்து அதற்குரிய படங்களையும் அனுப்பியுள்ளார். அவற்றை இங்கு இணைத்துள்ளோம். உரியவர்கள் நடவடிக்கை எடுக்க தமிழன் ஆசிரியபீடம் சுட்டிக்காட்டும்.

## ஐக்கிய தேசிய...

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் தொடரப்பட்டிருந்த வழக்கு தீர்ப்பு மற்றும் கொழும்பு சிவில் மேல் முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு ஆகியவற்றை ஆராய்ந்ததன் பின்னரே இவர்களை கட்சியிலிருந்து நீக்க கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, லோஜன் லெனாட் கருணாரத்ன, அஜந்த நிரோஷன் பாதுக்க, எம்.ஜயந்த தி சில்வா, கே.என்.ஹசித விஜேசிங்க, யூ.ஜோர்ச் பெரேரா, யூ.ஜீ.சந்திரசோம சரணலால், ரோஸ் பிரனாந்து, ரஞ்சன் ராமநாயக்க, பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, அஜித் பீ.பெரேரா, அசோக் அபயவர்தன, துஷார இந்துநில், நளின் பண்டார உள்ளிட்ட 53 கட்சி உறுப்பினர்களின் உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கற்பிட்டி பிரதேசசபை உறுப்பினர் யூ.எம். மொாஹமட் அக்மல், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஏ.பீ.நவாஸ், கொலன்னாவை பிரேதேச சபை உறுப்பினர் கே.எம்.ராவுத்தர் நிஜாம்டீன், கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சமிர் சஹாப்தீன், பாணந்துறை பிரதேசசபை உறுப்பினர் எம்.என்.எம்.தஹீர் பாசி, ஊவா பரணகம பிரதேசசபை உறுப்பினர் சிங்காரம் ராஜதுரை, நுவரகம் பலாத்த பிரதேசசபை உறுப்பினர் ஜெய்னுலாப்தீன் முஸாதிக் ஆகியோரின் கட்சி உரிமை இவ்வாறு நீக்கப்பட்டுள்ளது.

மேலும், தும்பனே பிரதேசசபை உறுப்பினர் எம்.என் மொஹமட் சிஹான், கங்க இஹலகோரலே பிரதேச சபை உறுப்பினர் சுப்ரமணியம் வாசுதேவன், கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களான எம்.ஏ. மொஹமட் டில்ஷாட் மற்றும் எம்.எஸ். மொஹமட் ரீஸா அகியோரின் உறுப்புரிமை உட்பட 60 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்....

அவர் மேலும் தெரிவிக்கையில், சிலர் தேசிய கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டாம் என தெரிவிக்கின்றனர். ஆனால், இவர்கள் எல்லாம் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலின் என்ன சென்னார்கள்? ஜனாதிபதியையும் பிரதமரையும் சர்வதேச தூக்குமேடைக்கு கொண்டு செல்வோம் என்று கூறிவிட்டு இன்று தங்களுக்கு வாக்களியுங்கள் என்று சொல்கின்றார்கள்.

தாங்கள் அரசாங்கத்துடன் கதைப்பதாக கூறுவோர் கடந்த காலத்தில் நல்லாட்சி என்று ஒரு ஆட்சியை கொண்டுவந்து என்ன செய்தார்கள்? தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனரா? அல்லது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கண்ணீருக்கு தீர்வு கண்டார்களா? நிலங்களை விடுவித்தார்களா? வேலைவாய்ப்பு கொடுத்தார்களா? எவ்வளவோ செய்திருக்கலாம். ஆனால், செய்யவில்லை. நான் இம்முறை மக்களிடம் 20 ஆசனங்களை எதிர்பார்க்கவில்லை 5,6 ஆசனங்களையே எதிர்பார்க்கின்றேன் தேசிய நல்லிணக்கம் மூலம் அதிகளவானவற்றை செய்வோம்.

இம்முறை ஈ.பி.டி.பி. கட்சிக்கு வாக்களிப்பதன் ஊடாக எங்களுடைய மக்கள் வடக்கு கிழக்கில் ஐந்துக்கு மேற்பட்ட ஆசனங்களை தருவார்கள் என எதிர்பார்க்கின்றேன் அது கிடைக்குமாக இருந்தால் சுண்டிச் சுண்டி ஒன்று இரண்டு வருடத்துக்குள் மக்களுடைய பிரச்சினைகளுக்கு என்னால் தீர்வு காண முடியும் எனத் தெரிவித்தார் டக்ளஸ்.

## மஹிந்த அரசுக்கு...

யாழ் ஊடக மையத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாக பொதுஜன பெரமுனவின் பிரமுகர்கள் சிலர் அண்மைக்காலமாக காட்டமான கருத்து தெரிவித்து வருவது ஒரு நாடகம். கூட்டமைப்பை பற்றி பெரமுனவும், பெரமுனவை பற்றி கூட்டமைப்பும் மாறிமாறி கருத்து தெரிவிப்பது, இரகசிய உடன்படிக்கையின் கீழேயே. இப்படிப் பேசினால் தெற்கில் அவர்கள் வாக்கு பெறலாம். அதேவேளை, வடக்கில் அவர்கள் விரும்பும் கூட்டமைப்பினர் வெற்றியடையலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற வேண்டுமென ஆட்சியாளர்கள் விரும்புவதற்கு காரணமுள்ளது. எதிர்காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சர்வதேச பொறியில் சிக்குவதற்காக வாய்ப்புள்ளது. நல்லாட்சி அரசாங்கம் சர்வதேச பொறியிலிருந்து தப்பிக்க, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உதவியதைப்போல, எதிர்காலத்தின் மஹிந்த ராஜபக்ஷவும், அவரது கட்சியினரும் பெற்றுக்கொள்ள விரும்புவது தெரிகிறது.

இலங்கையின் பங்குபற்றுதல் இல்லாமல் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை நடக்கவிருந்த நிலையில், பயணத்தடைகள் விதிக்கப்படவிருந்த நிலையில், நல்லாட்சி அரசாங்கம் எப்படி இலங்கையை பாதுகாத்தது என்பதை பற்றி அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் பத்திரிகை பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பில்லாமல் சர்வதேச நெருக்கடிகளிலிருந்து நல்லாட்சி அரசு தப்பித்திருக்கவே முடியாது. எனவே, ராஜபக்ஷ அரசும் சர்வதேச நெருக்கடியிலிருந்து தப்ப, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி அவசியமாக உள்ளது.

சலுகைகளுக்கு விலைபோகக்கூடிய இவர்களை பயன்படுத்தி, சிங்கள பௌத்த விஸ்தரிப்பை மேற்கொள்ளலாமென்றும் அரசு கருதலாம்.வெளிப்படையாக இரண்டு தரப்பும் மோதிக்கொள்வதைப் போல கருத்து சொன்னாலும், இரண்டு தரப்பும் இரகசிய தொடர்பில் உள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது 2 தடவைகள் ஆதரவு கோரி ராஜபக்ஷக்கள் என்னை தொடர்பு கொண்டனர். நான் கொடுத்த பதிலின் மூலம் அவர்கள் என்னை அறிந்திருப்பார்கள். அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து, கோட்டாபய அரசாங்கம் செயற்படவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அமைச்சுப் பதவியை கொடுத்து தம்முடன் வைத்திருக்க பெரமுன விரும்புகிறது. அதன் எதிரொலிதான் அண்மையில் அமைச்சு பதவியை பற்றி சுமந்திரன் தெரிவித்தது.

ஒரு பக்கத்தில் வடக்கு கிழக்கு இணைப்பை பற்றி பேசிக்கொண்டு, அரசின் போர்க்குற்றங்கள் பற்றி பேசிக்கொண்டு, எப்படி அமைச்சு பதவியை பெறுவது? இரண்டையும் செய்ய முடியாது. அமைச்சு பதவி ஆசையிருந்தால் ஐ.தே.கவில் போட்டியிடுங்கள். இங்கிருந்தபடி இரண்டையும் செய்ய முடியாது என்றார்.

## சர்வதேச சமூகத்திடம்...

ஏதுவாக இலங்கையை சர்வதேச நீதிமன்றுக்கு பாரப்படுத்து" போன்ற கோரிக்கையை முன் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எங்கள் உறவுகளுக்கான நீதி சர்வதேச நீதியாகவே வழங்கப்பட வேண்டும், வட கிழக்கில் தமிழருக்கு எதிராக நடத்தப்படும் சுமந்திரன் ஸ்ரீதரனை எதிர்க்கின்றோம், வடகிழக்கில் தமிழருக்கு எதிராக நடத்தப்படும் இராணுவ கெடுபிடிகளை உடன் நிறுத்து, இலங்கையில் போர்க் குற்றம் செய்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முற்படுத்துங்கள், எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று உண்மையைச் சொல், வெள்ளை வானில் கடத்தி செல்லப்பட்டவர்கள் எங்கே, சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனையும் இன்றி விடுதலை செய் என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

இப்போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பலர் கலந்து கொண்டு கண்ணீர் மல்க ஈடுபட்டிருந்ததை காண முடிந்தது.

# புளியந்தீவு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம்

மட்டக்களப்பு புளியந்தீவு வாவிக்கரை வீதி – 02 ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் சிறப்பாக இடம்பெற்று வருவதாக ஆலய பரிபாலன சபை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

10 நாட்கள் கொண்ட வருடாந்த மஹோற்சவத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை (ஓகஸ்ட் 03) தேர்த்திருவிழாவும் செவ்வாய்க்கிழமை (ஓகஸ்ட் 04) தீர்த்தோற்சவமும் இடம்பெற்று நிறைவுபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை, நண்பகல், மாலை கிரியைகள் இடம்பெற்று வருகின்றன.

மூலமூர்த்திக்கு அபிஷேகம், கொடித்தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை இடம்பெற்று இரவுத் திருவிழாவில் பிள்ளையார், முருகப் பெருமான், சிவன் பார்வதி சகிதமும் சிவன் சக்தி சகிதமும் உள்வீதி, வெளி வீதி வலம் வருதல் இடம்பெற்று வருகின்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ த.சிவகுமாரன் குருக்கள் தலைமையில் உதவிக் குருமார்கள் கிரியைகளை நிகழ்த்தி வருகின்றனர்.







# 'உங்களுக்கு வீடு, நாட்டுக்கு எதிர்காலம்'

– மூன்றாம் கட்ட வீடுகளுக்கான அடிக்கல் நடல் நிகழ்வு –





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவில் உருவான 'உங்களுக்கு வீடு, நாட்டுக்கு எதிர்காலம்' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 20 கிராமசேவையாளர் பிரிவில் மூன்றாம் கட்டமாக 2 கிராமசேவகர் பிரிவுகளான அன்னமலை –1, 3 உள்ள பயனாளிகளுக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இப்புதிய வீடுகளுக்கான நிர்மாணத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாவிதன் வெளி பிரதேச செயலாளர் எஸ். ரங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இப்புதிய வீட்டு நிர்மாணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மானிய நிதியுதவியின் கீழ் ஆறு இலட்சம் ரூபா செலவில் பூர்த்திசெய்யப்படவுள்ளது. நிரந்தர வீடில்லாத வறுமைக்கோட்டின் கீழுள்ள சமுர்த்தி பெறும் ஏழைக் குடும்பங்களுக்கு அவர்களின் சொந்த இடங்களில் வீடமைத்துக் கொடுக்கும் அரசின் இவ்வேலைத்திட்டத்தின்கீழ் இவ்வீடமைப்பு நிர்மாணத்திற்கான குறித்த பயனாளியின் சொந்த இடத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்விற்கு அதிதியாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை கல்முனை மேலதிக முகாமையாளர் ஏ.எம் இப்ராஹிம் வருகை தந்ததுடன் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஆர்.லதாகரன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நாவிதன்வெளி பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் மோ.ஜயபோசன், அவ்வவ் பிரிவு கிராம சேவையாளர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பயனாளி குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# ரிஷாட் பதியுதீன் வஞ்சிக்கப்படுவதை ஒட்டுமொத்த சமூகமும் கண்டிக்க வேண்டும்

## கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஷிபான் வேண்டுகோள்

(சாய்ந்தமருது )

தேர்தலொன்றை எதிர்நோக்கியுள்ள சூழ்நிலையில் எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன் மீது போலியான குற்றச்சாட்டுகள் புனையப்பட்டு, தேர்தல் ஆணையாளரின் கட்டளையையும் மீறி அவரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு, வஞ்சிக்கப்படுவதை ஒட்டுமொத்த சமூகமும் கண்டித்து, குரலெழுப்ப முன்வர வேண்டும் – என்று கல்முனை மாநகர சபையின் புதிய உறுப்பினர் பி.எம்.ஷிபான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த பொதுச் சபை அமர்வு கடந்த செவ்வாயன்று மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றது. இதன்போது கன்னியுரை நிகழ்த்துகையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

உறுப்பினர் பி.எம்.ஷிபான் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பதவியில் என்னை அமர்த்தி,



அலங்கரித்த எமது தலைவர் ரிஷாத் பதியுதீனுக்கு இந்த உயரிய சபையில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்து 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக மருதமுனை ஐந்தாம் வட்டாரத்தில் போட்டியிட்டு 583 வாக்குகளை பெற்றிருந்தேன். எனது கட்சி சார்பாக தோல்வியடைந்தவர்களில் கல்முனை ஒற்றை அங்கத்தவர் தொகுதியில் அதிகூடிய வாக்குகளைப் பதிவுசெய்திருந்தேன். நியமன அங்கத்துவம் வழங்கப்படும்போது கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு வழிவிட்டிருந்தேன். தற்போது இந்தப் பதவியை எனக்கு விட்டுத்தந்த முன்னாள் உறுப்பினர் நைனா முஹம்மத் ஹாஜியாருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாநகர சபையானது உள்ளூராட்சி அதிகாரசபையின் மிகப்பெரிய அலகாகும். இதன் வளர்ச்சியிலும் வினைத்திறனான செயற்பாட்டிலும் எமது பிராந்தியத்தின் வளர்ச்சி தங்கியுள்ளது. ஆகவே, நமது மேயரின் நல்ல விடயங்களுக்கு என்றும் ஒத்துழைப்பு வழங்க நான் தயாராகவுள்ளேன். அத்தோடு மேயர் உட்பட உறுப்பினர்கள் அனைவரும் கட்சி வேறுபாடுகளுக்கப்பால் எனது அரசியல் பயணத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என திடமாக நம்புகின்றேன்.

இன்றைய நாளில் எமது கட்சியினுடைய தலைவர் ரிஷாட் பதியுதீன் மீது போலியான குற்றச்சாட்டுகள் புனையப்பட்டு, தேர்தல் ஆணையாளரின் கட்டளையையும் மீறி அவரிடம் வன்னியிலே வைத்து வாக்குமூலம் எடுக்கும் நடவடிக்கை நடைபெறுகின்றது.

கட்சி வேறுபாடுகள், இன வேறுபாடுகளுக்கப்பால் சிறுபான்மை இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கட்சியின் தலைமைத்துவம் என்ற அடிப்படையில் ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் காட்டமான நடவடிக்கைகளை எதிர்த்துக் குரல் கொடுக்கும் பணிக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் –என தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றேன் என்றார்.




# ஹக்கீம் கண்டியிலும் கிழக்கிலும் வெவ்வேறு முகங்களைக்காட்டி மக்களை ஏமாற்றுகின்றார்

## கல்முனையில் தேசிய காங்கிரஸ் வேட்பாளர் றிசாத் ஷரீஃப்

நமது மக்களின் அரசியல் விடுதலைக்கான கட்சியாக தேசிய காங்கிரஸ் கடந்த காலங்களில் இருந்துவந்துள்ளது. இப்போது மட்டுமல்ல, எப்போதும் கல்முனை மக்களான நமக்கான குரலாக தேசிய காங்கிரஸின் குரல் இருந்துவந்துள்ளது. அந்தக் குரலை பலப்படுத்துவதால் மாத்திரமே கல்முனை மக்களான எங்களினதும் இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களினதும் வாழ்வும், நிம்மதியும் நிலைக்கும். அதுமட்டுமன்றி தேசத்தின் சுபீட்சமும் அந்த புள்ளடியிலேயே தங்கியுள்ளது.

இவ்வாறு தேசிய காங்கிரஸின் வேட்பாளர் றிசாத் ஷரீஃப் தெரிவித்தார். கல்முனை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

கடந்த 20 வருடங்களாக எங்களுடைய வாக்குகளைப் பெற்று அரசியல் பிழைப்பு நடத்திவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவராலோ அல்லது எமது பிரதேச பிரதிநிதிகளினாலோ எமது முஸ்லிம் சமூகத்தின் சார்பிலான எந்த ஒரு விடயங்களையும் சாதிக்க முடியாது போயுள்ளது. தற்போது தமது ஆசனங்களை பெற்றுக்கொள்ள மக்களை உசுப்பேத்தி வாக்குகளை கொள்ளையடிக்கும் இனவாத, பிரதேசவாத சூழ்ச்சி அரசியல் கோஷங்களை அவர்கள் பாவித்து வருகின்றனர்.

கல்முனையை பாதுகாக்க வேண்டுமாயின், கடந்த காலங்களில் எமது நலனுக்காக ஒலித்த தேசிய காங்கிரஸின் குரலையும் அதன் தலைமையின் கரத்தையும் பலப்படுத்துவதோடு இங்கே போட்டியிடுகின்ற கல்முனை தொகுதிக்குரிய வேட்பாளர்களான எங்களுக்கு ஆதரவை வழங்க வேண்டும். இந்தப் பிரதேச மக்கள் தேசிய நீரோட்டத்தில் பயணிக்கும் தேசிய காங்கிரஸின் தலைமையை பலப்படுத்துவதனூடாகவே கல்முனையில் அரசியல் பிழைப்புக்காக விரிசல்படுத்தப்பட்டுள்ள தமிழ் – முஸ்லிம் உறவு, ஏனைய பிரதேசங்களுக்கு இடையிலான உறவு, அபிவிருத்திசார் அரசியல்



நிர்வாக ரீதியான பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்க்க முடியும்.

கடந்த 2015 பொதுத் தேர்தல் காலத்தில் ஹென்றி மகேந்திரன் என்கின்ற ஒருவரை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தியவர்கள் இன்று ஞானசார – கருணா போன்றோரின் புகைப் படங்களை தமது முகநூலிலும் சுவரொட்டிகளிலும் பாவித்து முகவரிகள் கூட இல்லாத அமைப்புகளை காட்டி வாக்குப்பிச்சை கேட்கும் அளவுக்கு அவர்களது நிலைமை சென்றிருக்கிறது என்பதுதான் உண்மை.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அவரது ஆசனத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கண்டி மாவட்ட சிங்கள – தமிழ் மக்களிடம் ஒருமுகத்தை காட்டுகின்றார். அங்கு இதுவரை ஒரு சுவரொட்டியிலோ, ஒரு பிரசார மேடையிலோ மறைந்த மாபெரும் தலைவரை அவர் கண்ணியப்படுத்தியதில்லை. ஆனால், கிழக்கு மாகாணத்திற்கு வரும்போது முஸ்லிம் காங்கிரஸ் தொப்பியும் சால்வையும் அணிந்துகொண்டு மறைந்த தலைவரின் புகைப்படத்தை இங்கு பாவித்து மக்களின் உச்சபட்ச அதிகாரமான வாக்குரிமையை கபடத்தனமாக அபகரித்து இனங்களுக்கிடையில் உசுப்பேற்றி, குறிப்பிட்ட பிரதேசங்களில் இருக்கின்ற அரசியல் ஆளுமைகளை பிரித்தாண்டு தனது இருப்பையும் தலைமையையும் பாதுகாக்கின்ற கைங்கரியத்தை தொடர்ந்தேர்ச்சியாக அவர் செய்து வருகின்றார். இதனை மக்கள் புரிந்தும் தொடர்ந்து கிழக்கு மண் ஏமாற்றப்படுவது மிக வருத்தம் அளிக்கின்ற ஒரு விடயமாகும். எமது உரிமைகளை வெல்வதாயின் தேசிய காங்கிரஸ்•க்கு வாக்களித்து இந்த அம்பாறை மாவட்ட மக்களை பாதுகாப்பதற்கு முஸ்லிம்களாகிய நாம் கடமைப்பட்டுள்ளோம் என்றார்.



திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் அலஸ் தோட்டம் மாதுமை அம்பாள் வித்தியாலயத்திற்கு இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான நிழல் பிரதி இயந்திரமொன்று நேற்றுக்காலை வழங்கப்பட்டது. லண்டனில் வசிக்கும் யோகராஜா நிஷாந்தின் நிதி அனுசரணையில் இந்த இயந்திரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வித்தியாலயத்தின் நீண்டகால தேவையை கருத்திற்கொண்டு கோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.
(திருகோணமலை )


**தேர்தல் காலங்களில் பொதுச்சொத்துக்கள் முறையற்ற வகையில் பயன்படுத்துவது பற்றி உங்களுக்குத் தெரியுமா?**

**அரச வாகனங்கள், உலங்கு வானூர்தி உள்ளிட்ட போக்குவரத்து வசதிகளை பயன்படுத்துதல்,**
**அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள்,**
**அரச கட்டிடங்கள் மற்றும் பொது நிதி செயற்றிட்ட மற்றும் அனர்த்த உதவிகளை பகிர்ந்தளித்தல்**
**அரச நியமனங்கள், பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் செய்தல் போன்றன பொது சொத்துக்களை**

**தவறான முறையில் பயன்படுத்தி உங்களது வரிப்பணத்தை துஃபிரயோகம் செய்வதாகும்.**



**முறைப்பாடுகளுக்கு**
தேர்தல் காலங்களில் பொதுச்சொத்துக்களை தவறாக பயன்படுத்துதல் பற்றிய தகவல்கள் பிரஜைகளாகிய உங்களிடமிருந்தால் உறுதிப்படுத்தக்கூடிய சாட்சியங்களுடன் எமக்கு அனுப்புங்கள் (தகவல்களின் இரகசியத் தன்மை பேணப்படும்)

முகவரி
**பொதுச் சொத்துக்களை பாதுகாக்கும் வேலைத்திட்டம்**
**ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா, 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு 05**

தொலைநகல்
011 250 1707

துரித அழைப்பு
076 322 3442 076 322 3662

இணையம: **apesalli.lk**
மின்னஞ்சல்: **pppr@tisrilanka.org**

**தேர்தல் காலங்களில் பொது சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42, தொலைபேசி : 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com
2020 ஜூலை 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை

# தேவை சிறுவர் பாதுகாப்பு!

சிறுவர்கள் பலரை துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் பன்னிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியரொருவர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை நாம் அனைவரும் அறிந்த விடயம்.

இந்த ஆசிரியரிடமிருந்து இப்போது வெளிவரும் தகவல்கள் மயிர்க்கூச்செறிய வைக்கின்றன. சிறுவர்கள் பலரின் வீடியோக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளார். அவற்றில் பெருமளவு வருமானம் வந்துள்ளது. அவரின் வீட்டை சோதனையிட்டபோது சிறுவர்களின் ஆடைகள், படங்கள் உட்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. தொலைக்காட்சிகளில் நடக்கும் சிறுவர் கேளிக்கை நிகழ்ச்சிகளுக்காக ஏராளமான சிறுவர்களை அழைத்துச் செல்லுதல், அவர்களை பயிற்றுவித்தல் உட்பட பல விடயங்களை செய்து பெற்றோரின் நம்பிக்கையை வென்று, இந்தச் சிறுவர்கள் ஆசிரியரால் துன்புறுத்தப்பட்டுள்ளனர்.

சிறுவர்கள் நாட்டின் கண்கள். எதிர்கால சமுதாயத்தின் காவலரண்கள் சிறுவர்கள். சிறுவர் என்றாலே சிறுமிகளையும் சேர்த்துத்தான். அவர்களை மட்டும் தனியாக குறிப்பிடவேண்டிய அவசியமில்லை. இப்படியான சிறுவர்கள் சமுதாயத்தின் வழிகாட்டியாக கருதப்படும் நபர்களாலேயே துன்புறுத்தப்படுவது பெருந்துயர். எனவேதான் சிறுவர்களை உள்ளடக்கிய இளைய சமுதாயம் பாதுகாக்கப்படவேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

சிறுவர்கள் இவ்வாறு பாதிக்கப்படுவதன் பெரும் பொறுப்பு பெற்றோர் அல்லது பாதுகாவலரின் கைகளில் இருக்கிறது என்ற உண்மையை நாங்கள் மறந்துவிடக் கூடாது. இன்றைய காலகட்டத்தில் பிள்ளைகள் விரும்புவதை கண்மூடித்தனமாக ஆதரிப்பது, அவர்கள் ஆடை அணிகலன்களில் உரிய கவனம் செலுத்தாமை, சமூக வெளியில் தமது பிள்ளைகள் பிரபலமாக இருப்பதை பெருமையாக விரும்புவது, யாருடனும் எந்த நேரத்திலும் வெளியில் சென்றுவர அனுமதிப்பது போன்ற இன்னோரன்ன விடயங்களும் சிறுவர்கள் பாதிக்கப்படுவதற்கு பெரும் காரணங்களாக அமையலாம் என்ற கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

இந்த உலக ஓட்டத்துடன் செல்வதற்கு சமூகத்துடன் இணைந்திருக்க வேண்டியதன் அவசியத்தால் அப்படிச் செய்யவேண்டிய தேவை எழுந்தாலும் பெற்றோர் அதிலும் மிகப் பொறுப்பாக செயற்படவேண்டியது கட்டாயமாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களை நன்றாக நோக்கினால் பிள்ளைகள் ஒரு கட்டத்தில் பெற்றோரின் சொற்கேளாமல் தான்தோன்றித்தனமாக செயற்படத் துணிவதற்கும் அவையே ஏதுவாகவும் அமைகின்றது. ஒருகட்டத்தில் பெற்றோரே விரும்பி, தமது விருப்பை நிறைவேற்ற பிள்ளைகளை கண்டபடி இடங்களுக்கு அனுப்புவதும் பின்னர் அது வேண்டாமென பெற்றோரே சொன்னாலும் கேட்காதளவுக்கு பிள்ளைகள் மாறிவிடுவதும் வரலாற்றுத் துயர்.

பெற்றோரின் இந்த பலவீனங்களையே மேற்கண்ட ஆசிரியர் தனக்குச் சாதகமாக பயன்படுத்தியிருக்கிறார். இன்னுமின்னும் பல விடயங்கள் அம்பலத்திற்கு வரும்போது இந்த ஆசிரியருடன் பழகிய மாணவச் சிறுவர்களின் உளவியல் நிலைமை எப்படியிருக்கும் என்பதை நாம் சிந்திக்கவேண்டியதாயிருக்கிறது. பிஞ்சு வயதில் அவர்கள் மனநிலை பாதிக்கப்படும்போது அவர்களின் எதிர்காலம் எப்படியாக அமையப்போகிறது என்பதை ஆராயவேண்டியிருக்கிறது.

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த சட்டங்களை புதிதாக கொண்டுவரவேண்டுமென ஆட்சியாளரை வலியுறுத்தவேண்டியுள்ள அதேசமயம், சிறுவர்களை பாதுகாக்கும் பெரும் பொறுப்பை பெற்றோர், பாதுகாவலர்களும் வகிக்கவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். நவநாகரீக காலத்தில் வந்துகொண்டிருக்கும் சினிமா, தொலைக்காட்சித் தொடர்கள், ஆபாச சஞ்சிகைகள், சமூக இணையதளங்களின் வருகையால் பசுந்தோல் போர்த்திய புலிகளாகவே பலரும் இருக்கின்றனர். அதுவே உண்மை. அண்மைக்கால வன்மங்கள், சம்பவங்கள் அதனையே உணர்த்திநிற்கின்றன.

எனவே, சிறுவர்களை பாதுகாக்கவேண்டும் என்று குரலெழுப்பும் அதேசமயம், அதன் முதற்பொறுப்பு பெற்றோர்களிடம் இருக்கிறதென்பதை மறந்துவிட முடியாது.பெற்றோர்களைத் தவிர, வேறெந்த தரப்பும் சிறுவர்களுக்கு நல்ல பாதுகாவலனாக இருந்துவிட முடியாது !

“தமிழன்” பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

## கருணா விவகாரத்தில் புது தகவல்!

# “பிரபாகரன் உண்மையில் அப்படிச் சொன்னாரா?”

## மனோவிடம் கேட்ட ரணில்



தனது அனுபவங்களை முகப்புத்தகத்தில் பதிவிட்டுவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான தலைவர் மனோ கணேசன், நேற்று கருணா விவகாரம் குறித்து பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவு வருமாறு,

புலிகளும், ரணிலும், மஹிந்தவும், நானும், கருணாவும், மௌலானாவும்

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை சந்தித்துவிட்டு நான் கொழும்பு வந்த அடுத்தநாள் பிரதமர் ரணிலை அவரது நாடாளுமன்ற அலுவலகத்தில் சந்தித்தேன்.

நான் விடுதலைப் புலிகள் தலைவரை சந்திப்பதற்கு கிளிநொச்சி சென்றபோது, பிரதமர் ரணில் கொழும்பில் இருக்கவில்லை. ஆகவே, அப்போது அரசாங்கத்தில் “செகண்ட்–இன்– கமாண்ட்” ஆக இருந்த அமைச்சர் கரு ஜயசூரியவிடம் எனது பயணத்தைப் பற்றி கூறி சென்றிருந்தேன்.

ஜனாதிபதி சந்திரிகா ஒரு தகவலை கொண்டுசென்று புலிகளின் தலைவரிடம் சேர்க்கச் சொன்னார் என்று கருவிடம் முன்னமேயே கூறியிருந்தேன்.

கரு மூலமாக எனது கிளிநொச்சி பயணத்தை அறிந்த ரணில், புலிகளின் தலைவர் பிரபாகரனுடனான எனது சந்திப்பு பற்றி அறிய விரும்பினார்.

அதேசமயத்தில் கிளிநொச்சி சென்று புலிகளின் தலைவரை என்னைப் போலவே சந்தித்த அமைச்சர்கள் ஆறுமுகம் தொண்டமான், பெரியசாமி சந்திரசேகரன் ஆகியோரிடமும் ரணில் கதை விட்டு தகவல்கள் பிடுங்கியிருக்கலாம்.

எனது சந்திப்பு பற்றி என்னுடன் ரணிலுக்கு பேசி அறிய வேண்டிய தேவை இருந்ததைபோல, எனக்கும் ரணிலுடன் இதுபற்றி பேசவேண்டிய தேவை இருந்தது. புலிகளின் தலைவர், “ரணிலுக்கு சொல்லுங்கள்!” என்று எனக்கு சொன்ன செய்தியை நான் பிரதமர் ரணிலிடம் கூறவேண்டும் அல்லவா?

விடுதலைப் புலிகள் தலைவரால் சொல்லப்பட்ட, கருணா அம்மான் தொடர்பான விடயத்தை அவர் சொன்ன மாதிரியே நான் ரணிலிடம் சொன்னேன். “அலிசாஹீர் மௌலானா மூலமாக கருணா அம்மானை கொழும்புக்கு கூட்டிவந்தீர்கள். இன்று அவரை கொழும்பிலே இரகசியமாக ஒளித்து வைத்திருக்கிறீர்கள்” என்று பிரபா கூறியதை அப்படியே ரணிலிடம் கூறினேன்.

நான் இதை சொன்னபோது ரணிலின் அறையில் நானும், ரணிலும் மட்டும்தான் இருந்தோம். மேசையின் அந்தப் பக்கம் ரணில். இந்தப் பக்கம் நான். ரணில், என் முகத்தை சற்றுநேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்.

பிறகு, பிரபாவின் குற்றச்சாட்டை முற்றாக மறுத்தார். கருணா அம்மான் தானாகவே பிரபாவுடன் முரண்பட்டு, சண்டையிட்டுக்கொண்டதாகவும்தான் தனக்கு புலனாய்வு அறிக்கை கிடைத்ததாக ரணில் என்னிடம் சொன்னார்.

இப்பொழுது எனது சந்தர்ப்பம். நான் சற்றுநேரம் ரணிலின் முகத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு இருந்தேன். இல்லை, இல்லை என்று மறுத்து நாட்டின் பிரதமருடன் விவாதம் செய்யவேண்டிய தேவை எனக்கிருக்கவில்லை.

“இதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது, மிஸ்டர் பிரபாகரன் அப்படித்தான் உங்களுக்கு சொல்லச் சொன்னார்” என்று கூறிவிட்டு அந்த அறையிலிருந்து வெளியேறத் தொடங்கினேன்.

அமைதியாக அமர்ந்திருந்த பிரதமர் ரணில், கதவுப்பிடியில் கைவைத்து கதவைத் திறக்க முற்பட்ட என்னை அழைத்து, அவரது ஆசனத்தில் அமர்ந்திருந்தபடியே “உண்மையிலேயே பிரபாகரன் அவ்வாறு கூறினாரா?” என்று கேட்டார்.

நான் கதவுக்கு அருகில் நின்றபடியே “ஆம்!” என்று வார்த்தையாலும், தலையசைத்தும் கூறிவிட்டு பிரதமர் அறையிலிருந்து வெளியேறினேன்.

அடுத்து வந்த நாட்களில் சில சம்பவங்கள் நடந்தன. ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் எம்.பி.யாக இருந்த அலிசாஹீர் மௌலானா தனது எம்.பீ. பதவியை இராஜினாமா செய்தார். அதன்பின்னர் அவர் நாட்டிலிருந்து வெளியேறினார். இந்த முடிவுகளுக்குப் பின்னால் பிரதமர் ரணில் இருந்ததை நான் ஊகித்துக்கொண்டேன்.

அப்போது அலிசாஹீர், ஐக்கிய தேசிய கட்சியின் நேரடி உறுப்பினர். அவரது தலைவர் ரணில் விக்ரமசிங்கதான். இப்போது அலிசாஹீர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கிய உறுப்பினர். இப்பொழுது அவரது தலைவர் நண்பர் ரவுப் ஹக்கீம்.

அலிசாஹீர் நல்லாட்சியின் இறுதி வருடத்திலேயே எனது அமைச்சின் பிரதி அமைச்சராகவும் சில மாதங்கள் இருந்தார்.

எனினும், நான் ஒருபோதும் நேரடியாக அலிசாஹீரிடம் “நீங்களா, கருணா அம்மானை புலிகள் அமைப்பிலிருந்து பிரித்து கொழும்புக்கு அழைத்துவந்தீர்கள்?” என்று கேட்கவே இல்லை.

புலிகள் அமைப்பிலிருந்து கருணாவை நீங்களா பிரித்தீர்கள் என்று அலிசாஹீரிடமோ, ரணிலிடமோ நான் கேட்டிருந்தால், அதைவிட முட்டாள்தனமான ஒரு கேள்வி இருந்திருக்காது.

விடுதலைப் புலிகள் அரசில் சிறுவர்கள் கிடையாது. அவர்களை யாரும் திட்டமிட்டு பிரிக்க முடியாது. அவர்களுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளைத்தான் அடுத்தவர்கள் பயன்படுத்த முடியும்.

ஆகவே, புலிகளின் தலைவர் தனது கிழக்கு மாகாணத் தளபதியை தனது அமைப்பிலிருந்து வெளியேற்றினார். இதையே கருணா அம்மானிடம் கேட்டால், என்னை யாரும் வெளியேற்றவில்லை, நானேதான் வெளியேறினேன் என்று கூறுவார். அது அவரவர் நிலைப்பாடுகள்.

எது எப்படி இருந்தாலும் கூட, விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலகிவிட்ட கருணா அம்மானை அலிசாஹீர் கொழும்புக்கு அழைத்துவந்தார் என்று எனக்கு நம்பத்தகுந்த தகவல் கிடைத்திருந்தது.

கருணாவும், அலிசாஹீரும் ஒரே மட்டக்களப்பு மாவட்டத்துக்காரர்கள் என்ற முறையிலும், இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கலாம்.

இலங்கையின் பிரதமர் என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்க, கருணா அம்மான் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிவதை விரும்பியிருப்பார். பிரிந்த கருணாவை தனது எம்.பி. மௌலானா ஊடாக கொழும்புக்கு கொண்டுவந்திருப்பார்.

இது பின்நாட்களில் கருணா அம்மானை பயன்படுத்தி புலிகளை தோற்கடிக்க ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு வழிசமைத்தது.

இதிலே துரதிஷ்டசாலிகள் இரண்டு பேர். ஒருவர் பிரதமர் ரணில். அடுத்தவர் புலிகளின் தலைவர் பிரபா.

தான் புலிகளின் பிரதான தளபதியை பிரித்து, புலிகளை பலவீனப்படுத்தி, அவர்கள் தோல்வியடைவதற்கு பெரும் காரணகர்த்தா என்று தன்னை சிங்கள மக்கள் மத்தியிலே சந்தைப்படுத்திக்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முடியவில்லை. இது ரணிலின் துரதிர்ஷ்டம்.

அதேபோல ரணிலை தோற்கடித்து, அதன்மூலம் கொழும்பிலே ஒரு சிங்கள தேசியவாத அரசாங்கம் உருவாகினால்தான், தமிழ் ஈழத்துக்கான தமது பயணம் இலகுவாகும் என புலிகளின் தலைவர் பிரபாகரன் தவறாக கணக்கு போட்டுவிட்டார். இது அவரது துரதிர்ஷ்டம்.

இங்கே அதிஷ்டசாலி யார்? சந்தேகம் இல்லாமல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான்!

பிரபா கட்டளையிட்டு ரணிலுக்கான வாக்குகளை வடக்கில் தடுக்க, சுலபமாக ஆட்சிபீடம் ஏறி, ரணில் பிரித்து கொழும்பிற்கு கொண்டுவந்த கருணாவை பயன்படுத்தி யுத்தத்தையும் வென்றவர் மஹிந்த.

அவர் பெரும் அதிர்ஷ்டசாலியென்பதை போல இந்த நிகழ்வுகளின் ஏனைய இரண்டு பாத்திரங்களான கருணா அம்மானும், அலிசாஹீர் மௌலானாவும்கூட இரண்டு சிறியளவில் கூட்டு அதிர்ஷ்டசாலிகள்தான்.

***

# நலிந்தவர்களின் குரலாக இருக்க விரும்புகிறேன்

## - சுதந்திரக் கட்சியின் யாழ் வேட்பாளர் பவதாரணி



அடிப்படைத் தேவைகளை முன்வைக்கின்றீர்களே உரிமை தேவையற்றதா என ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெண்வேட்பாளர் பவதாரணி ராஜசிங்கம், உரிமை அவசியமானதெனில் அத்தியாவசியம் என்பது அதேயளவு முக்கியமானது. உரிமையை பற்றிபேசத்தான் பலர் இருக்கிறார்களே. நானும் அதையே கூறவா, இல்லை அடிப்படைத் தேவையை தீர்க்க முயலவேண்டாமா?” என பதிலளித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் “வரப்புயர” என்ற ஒரு சொல்லுக்குள்ளே ஆயிரம் அர்த்தங்கள் உள்ளன. இந்த ஒற்றை வார்த்தையின் அர்த்தம் ஆழமானது. எல்லாவற்றிலும் மக்கள் தன்னிறைவடைய வேண்டும், சிறக்க வேண்டும் என்பதே எனது நோக்கம்.

இங்கே பலர் உரிமைகள் பற்றி பேசுகின்றார்கள். நான் உரிமையை பற்றி பேசாதவள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவள். ஆனால், நான் உரிமைபற்றி பேசாதவள் அல்ல. உரிமை தேவை ஏற்படும்போது பேசவேண்டும். குரல் கொடுத்தாகவேண்டும் என்பதில் உறுதியாய் இருக்கிறேன். சரி இவர்கள் இத்தனை வருடமாக உரிமை பற்றி பேசிக்கொண்டு இருந்தார்கள். கிட்டத்தட்ட 72 வருடங்கள். அந்த உரிமையின் தேடலில் அவர்கள் அடைந்தது என்ன. இங்கு நான் அவர்கள் என சுட்டியது அரசியல்வாதிகளை அல்ல. மக்கள் தானே அரசு. அவர்களுக்காகத்தானே அரசு. அவர்களுக்கு என்ன கிடைத்தது.

இந்த அரசியல் பிரவேசத்திற்கு முன்பிருந்தே எனக்கு வடக்கு பழக்கமான மண். நான் சேவைசெய்யும் மண். எனது பிறந்தநாட்களில் அவர்களுக்கு விருந்து வைத்து, இல்லை ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்து பத்திரிகையில் போட்டிருந்தால் என்னைப் பற்றியும் தெரிந்திருக்கும். ஆனால், அதை நான் விரும்பவில்லை. எனக்கு தேவையானது அதுவும் இல்லை. தற்போது இந்த அரசியல் பயணத்தினூடான நகர்வில் சில இடங்களுக்குச் சென்றிருந்தேன். அந்த இடங்களில் உண்ண வழியில்லை, உறங்க வழியில்லை, மலசலகூட வசதிகளில்லை, பெண்கள் பாதுகாப்பாக துணி மாற்றிக்கொள்ளக்கூட கூச்சப்படும் சில வீட்டுத்திட்டங்கள். இத்தனை வருடங்களாக இவைதான் நாம் கண்டது.

மக்கள் அப்படியே இருக்க, ஆரம்பத்தில் அவர்களுக்கு இருந்த தேவைகள் அப்படியே இருக்கின்றன. மாற்றம் உண்டு இன்னும் சில தேவைகள் புதிதாய் இணைந்திருக்கின்றன. இதுவா மக்களுக்கான உரிமை. அடிப்படைத் தேவைகள் கூட பூர்த்தியடையாத ஒரு மனிதன் ஓங்கி உரத்துப் பேசினால் எவ்வளவு தூரம் கேட்கும். நான் நலிந்தவர்களுக்கான குரலாய் எப்போதும் இருப்பேன் என பதிலளித்தார்.

## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!

எலெக்சன் கேட்கிற பாதி ஆட்கள் இப்போதே பார்லிமெண்ட் போன மாதிரிதான் பேச்செல்லாம்... எப்படியோ ஐந்தாம் திகதிக்குப் பிறகு எல்லாம் சரியாப்போயிடும்...

பேஸ்புக்கில் கொஞ்சம் லைக் கிடைத்தால் அதுதான் மக்கள் ஆதரவு என்று நினைச்சு எலெக்சனில நிக்கலாம் என்று பாய்ந்தடிச்ச புது அரசியல் முகங்கள் ஒய்வெடுக்கவேண்டி வரும்...

என்னவோ ஐந்தாம் திகதிக்குப் பிறகு தேர்தலில தோற்ற ஆக்கள் மக்களைத்தான் திட்டித் தீர்ப்பார்கள்... வெற்றிபெறும் வேட்பாளர்கள் காசு செலவழிஞ்ச கவலையில இருந்தாலும் அடுத்த அஞ்சு வருஷத்தில அதை உழைச்சுக் கொள்ளலாம் என்று மனதை தேற்றிக்கொள்வார்கள்...

சுருக்கமா சொன்னா தேர்தல் யாவாரம் ஐந்தாம் திகதியோட முடிகிறது....



- சிவா -
siva@liberty.lk

# தேர்தல் பிரசாரத்திலும் அரசியல் கலாசாரத்திலும் புதிய மாற்றம்



## -ஜனாதிபதிக்கு மக்கள் பாராட்டு-

குறுகிய காலப்பகுதியில் தேர்தல் பிரசாரத்திலும் அரசியல் கலாசாரத்திலும் மேற்கொண்டுள்ள மாற்றத்திற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மக்கள் பாராட்டு தெரிவித்ததாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஊடகப்பிரிவின் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது;

சுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் மோதல்கள் இல்லாத புதிய தேர்தல் பிரசாரப் போக்கொன்று நாட்டில் உருவாகியுள்ளது. அது ஜனாதிபதித் தேர்தலிலிருந்து இதுவரை அரச தலைவராக ஜனாதிபதி மேற்கொண்ட செயற்பாடுகளின் மகிழ்ச்சியான பெறுபேறாகும் என மக்கள் தெரிவித்தனர்.

பொதுஜன பெரமுனவில் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்யும்வகையில் நேற்றுமுன்தினம் களுத்துறை மாவட்டத்தில் சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, பண்டாரகம சந்தை வளாகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்புக்கு வருகை தந்திருந்தபோதே இதனைத் தெரிவித்தனர்.

வேட்பாளர் லலித் எல்லாவலவினால் இச்சந்திப்பு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி, முன்னெடுத்துவரும் நிகழ்ச்சித்திட்டம் நாட்டின் பெரும்பான்மையான மக்களின் உள்ளங் களை வென்றுள்ளது. எனவே, ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்துவதற்கு கட்சி, நிறம் என்ற பேதமின்றி வாக்குகள் அளிக்கப்படும் என மக்கள் தெரிவித்தனர். அரசியலமைப்பு மாற்றத்தினூடாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவால் ஹொரன சந்தை வளாகத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் பங்குபற்றிய ஜனாதிபதிக்கு மக்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

குறைந்த வருமானம் பெறுவோருக்கும் பட்டதாரிகளுக்கும் தொழில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் தேர்தலின் பின்னர் உடனடியாக நடை முறைப்படுத்தப்படுமென மக்கள் எழுப்பிய வினாவொன்றுக்கு பதிலளிக்கும்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

ஹொரணை தக்சிலா கனிஷ்ட வித்தியாலயத்தின் சிறுமி ஹசலி விதுமுனி கொவிட் நிதியத்திற்கு தனது சேகரிப்பிலிருந்த பண உண்டியலொன்றை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

வேட்பாளர் லலித் வர்ணகுமார பெல்லபிட்டிய பொது விளையாட்டரங்கில் ஏற்பாடுசெய்திருந்த மக்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி பங்குபற்றினார். பிரதேசத்தின் கல்வி, விவசாயம் மற்றும் வீதி முறைமை குறித்த பிரச்சினைகள் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டன.

பெரமுன மகா வித்தியாலயத்தின் சிறுமி உமேகா செவ்வந்தி கொவிட் நிதியத்திற்காக பண உண்டியலொன்றை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

வேட்பாளர் யசபால கோரலகே இங்கிரிய பிரதேச சபை விளையாட்டரங்கிலும் வேட்பாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன புளத்சிங்கள மகாவெலி விளையாட்டரங்கிலும் ஏற்பாடுசெய்திருந்த மக்கள் சந்திப்புகளிலும் பங்குபற்றிய ஜனாதிபதி, வருகை தந்திருந்த மக்களுடன் சுமுகமாக கலந்துரையாடினார்.

இறப்பர் சார்ந்த உற்பத்திகளுக்கான கேந்திர நிலையமாக களுத்துறை மாவட்டத்தை மாற்றுவதற்கான வாய்ப்பு குறித்து சஞ்ஜீவ எதிரிமான்ன ஜனாதிபதியிடம் தெரிவித்தார். இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பதவி வெற்றிடங்களுக்கு அங்கு பல வருடங்களாக சேவையிலுள்ளவர்களை நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யுமாறு முன்மொழிவொன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

வேட்பாளர் உதேனி அத்துகோரல பதுரெலியே பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் ஏற்பாடுசெய்திருந்த மக்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி பங்குபற்றினார்.

இச்சந்திப்புகளைத் தொடர்ந்து பதுரெலிய நகருக்கு நடைபயணமாக சென்ற ஜனாதிபதி வீதியின் இருபுறத்திலும் திரண்டிருந்த மக்களிடம் விபரங்களைக் கேட்டறிந்தார்.

வேட்பாளர் சந்ரபானு அதிகாரி மத்துகம பிரதேச சிறுவர் பூங்காவிலும் வேட்பாளர் அனுப பியும் பெஸ்குவல் மத்துகம சந்தை வளாகத்திலும் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் பங்குபற்றிய ஜனாதிபதிக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

வேட்பாளர் பியால் நிஷாந்த பேருவலை பிரதேச சபை அலுவலகத்துக்குப் பின்னாலும் வேட்பாளர் ரோஹித்த அபே குணவர்தன களுத்துறை புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள விளையாட்டரங்கிலும் ஏற்பாடுசெய்திருந்த மக்கள் சந்திப்புகளில் பங்குபற்றிய ஜனாதிபதி, அங்கு வருகை தந்திருந்த மக்களிடம் பிரதேசத்தின் பிரச்சினைகள் பற்றி கேட்டறிந்தார்.

வேட்பாளர் ரோஹித்த அபேகுணவர்தனவின் இணையதளத்தையும் ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார். ஹொரணை ஸ்ரீபாலி கல்லூரியில் முதலாம் ஆண்டில் கல்விகற்கும் சிறுமி ஆர்.ஏ.தஹம்தி விபக்ஷா பண உண்டியலொன்றை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

# லெபனான் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு பணியாளர்களுக்கு புதிய விதிமுறைகள்

கொவிட் - 19 தொற்று பரவுவதைத் தடுப்பதற்காக கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகள் தொடர்பாக எந்த நாட்டில் இருந்தும் லெபனானுக்குள் பிரவேசிக்கும் பணியாளர்கள் தொடர்பில் புதிய விதிமுறைகள் அந்நாட்டு பாதுகாப்பு செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 2020.07.13ஆம் திகதிக்குப் பின்னர் லெபனானுக்குள் வருவோர் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையொன்றை வைத்திருக்கவேண்டும். அத்தோடு அவர்கள் லெபனான் அதிகாரியினால் குறிப்பிடப்பட்ட ஹோட்டலில் தங்கியிருக்கவேண்டும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஹோட்டலுக்கான கட்டணம் பணியாளர்களினால் (தொழிலுக்காக செல்வோர்) செலுத்தப்படவேண்டும். இதனால் பி.சி.ஆர். பரிசோதனைக்கான கொடுப்பனவு மற்றும் 24 மணித்தியால காலத்துக்கு ஹோட்டலில் தங்கியிருப்பதற்குப் போதுமான தொகை ஆகிய பணம் தொழிலுக்காக செல்வோரிடம் இருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனை நேர்மறையாக இருக்குமாயின், வைத்திய சிகிச்சை வழங்கப்படுவதுடன் அதற்காக புலம்பெயர் தொழிலாளர்களினால் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டின் அனைத்து பிரதேச குடிநீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பியகமவில் தெரிவிப்பு



எதிர்வரும் ஐந்து வருடங்களில் நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் காணப்படும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பியகம மாவறமண்டிய திவிநெகும வாராந்த சந்தை பூமியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கம்பஹா மாவட்டத்தில் சில காலங்களாக தொடரும் குடிநீர்ப் பிரச்சினை தொடர்பில் விரைவில் ஆராய்ந்து அதற்கு நிரந்தரத் தீர்வொன்றை பெற்றுக்கொடுப்பதாக பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில், இதுவரை நீர் தேவையின் 50 வீதத்திற்கும் அதிகமான அளவுக்கு குழாய்நீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஏனையோருக்கு கம்பஹா மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நீர் வழங்கல் திட்டத்தின் ஊடாக குடிநீர் வசதியை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

கம்பஹா மாவட்டத்தில் காணப்படும் குப்பை பிரச்சினைக்கு 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த அரசாங்கம் வெற்றிகரமாக தீர்வை தேடிக் கொண்டிருந்ததாக தெரிவித்த பிரதமர், 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஏற்கனவே இருந்த அரசாங்கம் தோல்வியுற்று ஒரு வாரமாகும்போது முழு நாடும் குப்பைமேடாக மாறியதாக சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் கொள்கையை செயற்படுத்த வேண்டுமாயின் மொட்டு ஆட்சிக்கு வரவேண்டும் என்றும் நாட்டை அபிவிருத்தி செய்யக்கூடிய வேட்பாளர்கள் இருப்பது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் மாத்திரமே என்பதால் பலமான அரசாங்கத்தை உருவாக்குவதற்கு மக்கள் தமது கடமையை நிறைவேற்ற வேண்டும் என்றும் பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

குறித்த சந்திப்பில் கம்பஹா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களான பிரசன்ன ரணதுங்க, துலிப் விஜேசேகர, பிரசன்ன ரணவீர, சிசிர ஜயகோடி மற்றும் சீதா அரம்பேபொல உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# குருதிப் பரிசோதனைக்கு அதிக கட்டணம் அறவிடுவதற்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை



டெங்கு நோய் தொடர்பான பரிசோதனை மற்றும் இரத்த மாதிரியிலுள்ள கலங்களின் எண்ணிக்கை பரிசோதனை ஆகியவற்றுக்கு அதிக கட்டணங்களை அறவிடும் வைத்தியசாலைகள் மற்றும் ஆய்வுகூடங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

டெங்கு குருதிப் பரிசோதனைக்கான அதிகபட்ச கட்டணம் தொடர்பிலான விசேட வர்த்தமானி நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இதனடிப்படையில், B பரிசோதனை எனப்படும் பூரண குருதிக் கல எண்ணிக்கை பரிசோதனைக் கட்டணமாக 400 ரூபா அறவிடப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு பரிசோதனைக்கு 1,200 ரூபா அதிகபட்ச கட்டணமாக அறவிடப்பட வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சலுக்கான குருதிப் பரிசோதனைக்கு அதிக கட்டணம் அறவிடப்படுவதாக பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்ததாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க கூறியுள்ளார்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் நாடளாவிய ரீதியிலுள்ள பரிசோதனைக்கூடங்களில் சோதனை களை மேற்கொண்டதன் பின்னர் புதிய கட்டணம் தொடர்பான வர்த்தமானியை வெளியிட தீர்மானித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள கட்டணத்திற்கு அதிகமாக கட்டணம் அறவிடுவோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகமாக கட்டணங்களை அறவிடும் நிலையங்கள் தொடர்பில் 1977 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாடுகளை முன்வைக்கமுடியும் என ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# அதிக வேகத்துடன் பயணிக்கும் கொள்கலன் உள்ளிட்ட வாகனங்களின் வர்த்தக அனுமதிப்பத்திரம் இரத்து



அதிக வேகத்துடன் பயணிக்கும் கொள்கலன் உள்ளிட்ட வாகனங்களின் வர்த்தக அனுமதிப்பத்திரங்களை இரத்துச்செய்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகன விபத்துகள் அதிகரித்துச் செல்வதை கவனத்திற்கொண்டு இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 5 வருடங்களில் கொள்கலன் மற்றும் டிப்பர் வாகனங்களில் மாத்திரம் 1,845 விபத்துகள் இடம்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

பாரவூர்திகளை கவனயீனத்துடன் செலுத்துவதால் இவ்வாறான விபத்துகள் நேரிடுவதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். போட்டி மனப்பான்மையில் வாகனங்களை செலுத்துவதாலேயே, அதிக விபத்துகள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிர்ணயிக்கப்பட்டுள்ள வேகக் கட்டுப்பாடுகளுடன், குறித்த வாகனங்கள் பயணிக்கவேண்டும் எனவும் அவ்வாறில்லையெனின், வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட வர்த்தக அனுமதிப்பத்திரத்தையும் இரத்துச்செய்வதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# அரச அதிகாரிகள் இலஞ்சம் பெறும் வீதம் இந்த வருடம் கணிசமாக அதிகரிப்பு!

அரச அதிகாரிகள் இலஞ்சம் பெறும் வீதம், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகரித்துள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 17 சுற்றிவளைப்புகளில் 21 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மினி வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அதிபர் ஒருவர், பொலிஸ் சார்ஜன்ட்கள் நால்வர், கான்ஸ்டபிள் ஒருவர், பொலிஸ் பரிசோதகர் ஒருவர், உப பொலிஸ் பரிசோதகர்கள் இருவர், நேரக்கட்டுப்பாட்டாளர் ஒருவர் கைது செய்யப்பட்டவர்களில் உள்ளடங்குகின்றனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள பதிவாளர், மத்திய கலாசார நிதியத்தின் செயற்றிட்ட முகாமையாளர், பிரதேச செயலாளர், பிரதிப் பணிப்பாளர், கிராமசேவகர் ஆகியோரும் கைதானவர்களில் உள்ளடங்குகின்றனர்.

கொரோனா ஊரடங்குக் காலத்தில் ஊழல் குற்றச்சாட்டுகள் அதிகரித்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

# இன்று முதல் 10 ஆம் திகதி வரை விசேட போக்குவரத்துச் சேவை



பொதுத் தேர்தலை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் செல்லும் மக்களுக்காக இன்று முதல் விசேட போக்குவரத்துச் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இன்று முதல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை இந்த விசேட போக்குவரத்துச் சேவைகள் முன்னெடுக்கப்படும் என போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான 5,300 பஸ்கள் குறித்த நாட்களில் சேவையில் இணைத்துக்கொள்ளப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். இதனைத் தவிர, மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையிடமுள்ள 600 பஸ்களும் இந்தச் சேவையில் ஈடுபடவுள்ளன.

இதற்காக தற்காலிக போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தை வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஏற்படும் நெரிசல்களைக் குறைப்பதற்காக இவ்வாறான விசேட போக்குவரத்துச் சேவை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

# நுவரெலியாவில் காலநிலை மாறினாலும் மக்களின் மனநிலை மாறாது:

## பொதுஜன பெரமுன கூட்டணியே வெற்றிபெறும் - என்கிறார் விமல்

(ஹட்டன்)

அடுத்த பத்தாண்டுகள் என்பது கோட்டாபய ராஜபக்ஷ தசாப்தமாகும். எனவே, அவருடன் இணைந்து பணியாற்றக்கூடிய காலாவதியாகாத - பொருத்தமான உறுப்பினர்களை மக்கள் நாடாளுமன்றம் அனுப்பவேண்டும். நுவரெலியா மாவட்டத்தில் நிமல் பியதிஸ்ஸ முதலிடம் பிடிப்பார். மாவட்டத்தையும் கைப்பற்றுவோம் - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவங்ச தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது;

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான மொட்டு கூட்டணியே வெற்றிபெறும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. நுவரெலியாவில் காலநிலை மாறலாம். ஆனால்,



மொட்டை வெற்றிபெற வைக்கவேண்டும் என்ற மக்களின் மனநிலை மாறாது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டின் மீது பற்றுள்ள தலைவரை மக்கள் தெரிவுசெய்தனர். அவர் சிறந்த தேசிய தலைவராக செயற்பட்டுவருகின்றார். அவர் ஜனாதிபதியானதால்தான் கொரோனாவைகூட எமது நாட்டில் கட்டுக்குள் கொண்டுவர முடிந்தது. பழைய ஜோடி இருந்திருந்தால் (ரணில் - மைத்திரிபால) இந்நேரம் நிலைமை மோசமாகியிருக்கும். எனவே, எமக்குக் கிடைத்துள்ள சிறந்த தலைவரின் கரங்களை பலப்படுத்தவேண்டும். அவருக்கு தேவையான விதத்தில் அரசாங்கமொன்றை உருவாக்கவேண்டும்.

அடுத்த 10 ஆண்டுகள் கோட்டாபய தசாப்தமாகும். இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் தசாப்தமாகும். அனைத்து இன மக்களையும் அரவணைத்து புதியதொரு யுகத்தை உருவாக்கும் தசாப்தமாக அமையும். எனவே, காலாவதியான அரசியல்வாதிகளை நாடாளுமன்றம் அனுப்பாமல், சிறப்பாக செயற்படக்கூடியவர்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# அரசாங்கத்தின் உளவுப்பிரிவுகளால் நடத்தப்பட்ட ஆய்வில் ஐக்கிய மக்கள் சக்தியே முன்னிலையில்

## -தெரிவிக்கிறார் கண்டி மாவட்ட வேட்பாளர் வேலுகுமார்

கண்டி மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையை வென்ற ரவூப் ஹக்கீம், அப்துல் அலீம் ஆகியோருடன் இணைந்து நானும் முன்னிலை வகிக்கின்றேன். எமக்கு பேராதரவை வழங்குவதற்காக தமிழ், முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். கருத்துக்கணிப்புகளும் இதனையே சொல்கின்றன – என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.

வேலுகுமாரின் பிரசார நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், கண்டியில் நடைபெற்ற பிரசாரக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“பொதுத் தேர்தலுக்கான எமது பிரசாரங்களையும் வெற்றிகரமாக முன்னெடுத்து தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளோம். எம்மால் நடத்தப்படும் பிரசாரக்கூட்டங்களில் அணிதிரண்டு பங்கேற்று ஆதரவை வழங்கும் என் மக்கள், எதிர்வரும் தேர்தலில் வாக்களிப்பு மூலம் சாதனை படைக்கவுள்ளனர்.

15 ஆண்டுகளுக்குப் பிறகு வென்றெடுக்கப்பட்ட கண்டி மாவட்டத்துக்கான தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்வதில் உறுதியாக இருக்கும் தமிழ் மக்கள், ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளுடன் தமது பிரதிநிதி அதிஉயர் சபைக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தில் அணிதிரண்டுள்ளனர். எமது முஸ்லிம் சகோதரர்களும் அன்றுபோல் இன்றும் எனது வெற்றியில் பங்காளர்களாகியுள்ளனர்.



தமிழ் பேசும் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ள நிலையில், அவர்களை திசைதிருப்பும் முயற்சியில் சில அரசியல் கைக்கூலிகள் ஈடுபட்டுள்ளனர். தமது தோல்வி உறுதி என தெரிந்தும்கூட, அற்பசொற்ப சலுகைகளுக்காக வேட்பாளர்கள் என்ற போர்வையில் பேரினவாதிகளின் கைக்கூலிகளாக அவர்கள் களத்தில் நிற்கின்றனர். எனவே, தேர்தல் முடிந்ததும் இவர்களுக்கு கண்டியிலிருந்து புறமுதுகுக்காட்டி ஓடவேண்டிவரும்.

எமது வெற்றி உறுதியாகிவிட்டது. அரசாங்கத்தின் உளவுப் பிரிவுகளால் நடத்தப்பட்ட ஆய்வில்கூட நாமே முன்னிலை வகிக்கின்றோம். எனவே, எமக்கு பேராதரவை வழங்கும் அத்தனை நல்லுள்ளங்களுக்கும் நன்றிகள். ஓகஸ்ட் 5ஆம் திகதி கண்டி மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்கள் வழங்கும் ஆணையானது வரலாற்றுத் திருப்புமுனையாக இருக்கும்” – என்றார்.

# இரத்தினபுரி எம்பிலிபிட்டிய வாரச் சந்தை கட்டிடத்தொகுதிகளை அபிவிருத்திசெய்ய நடவடிக்கை

## - மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ

(இரத்தினபுரி)

எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள வாரச் சந்தை கட்டிடத்தொகுதிகளை விரைவில் அபிவிருத்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

மேற்படி எம்பிலிபிட்டிய பிரதேசத்திலுள்ள வாரச் சந்தை கட்டிடத்தொகுதிகளை அபிவிருத்திசெய்வது குறித்து அதன் குறைபாடுகளை கண்டறிவதற்காக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மேற்படி பிரதேசங்களுக்கு நேரில்சென்று பார்வையிட்டு பொதுமக்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மாகாண ஆளுநர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகள் என்பன எம்பிலிபிட்டிய, கொலோன்ன, பல்லேபெந்த, உடவலவ. கொலம்பகேஆர உட்பட 7 சந்தைத் தொகுதிகளில் சில்லறை மற்றும் மொத்த விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

இதை கவனத்திற்கொண்டே மேற்படி 7 சந்தைத் தொகுதிகளையும் முழுமையாக அபிவிருத்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான அனைத்து திட்டங்களும் சப்ரகமுவ மாகாண சபையின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மேலும் தெரிவித்தார்.





மேற்படி வாரச் சந்தைகளின்மூலம் எம்பிலிபிட்டிய பிரதேச சபைக்கு வருடாந்தம் 92 இலட்சம் ரூபா ஆதாயம் கிடைத்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# பெண்களிடம் நகைகள் கொள்ளை: கிளங்கன் வைத்தியசாலையில் கைவரிசை!

**(ஹட்டன்)**

**டிக்கோயா, கிளங்கன் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்ற பெண்கள் இருவரிடம் இரண்டு இலட்சத்திற்கும் அதிக பெறுமதியான நகை கொள்ளையிடப்பட்டுள்ளது என்று நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

**நேற்று முன்தினம் நடைபெற்ற இக்கொள்ளைச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, பிசியோதெரப்பி வைத்தியரைப்போன்று நடித்த நபரொருவர், குறித்த பெண்களை பரிசோதனை செய்யவேண்டும் என்றும், நகைகளைக் கழற்றி கைப்பையில் வைத்துவிட்டு வருமாறும் கூறியுள்ளார்.**

**அதன்பின்னர் பெண்கள் இருவரையும் அழைத்துச்சென்ற அவர், திடீரென காணாமல்போயுள்ளார். கைப்பைகளும் மாயமாகியுள்ளன. இதனால் கதறி அழுத பெண்கள் உடனடியாக நோர்வூட் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.**

**இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.**




# பதுளையில் இரு துப்பாக்கிகளுடன் இளைஞர் ஒருவர் கைது!

பதுளை வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு துப்பாக்கிகளுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீடொன்றில் துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், வீட்டை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அருனுகொல்லை கிராமத்திலுள்ள வீடொன்றே இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டது. இத்தேடுதலின்போது கட்டிலொன்றின் கீழ் மறைத்துவைக்கப்பட்டிருந்த இரு துப்பாக்கிகளை பொலிஸார் மீட்டனர். அத்துடன், அத்துப்பாக்கிகளுக்கு உரிமையாளரென்று கருதப்பட்ட இளைஞரையும் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார்,



குறித்த நபர் விசாரணையின் பின்னர் பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவாரென்று தெரிவித்தனர்.

# இருவெவ்வேறு பகுதிகளில் குளவித் தாக்குதல்: பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் வைத்தியசாலையில்

(மஸ்கெலியா)

மஸ்கெலியா மற்றும் நல்லத்தண்ணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரு வெவ்வேறு பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று குளவித் தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில், மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

நல்லத்தண்ணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மறே தோட்ட வலதல பிரிவில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த 11 பெண் தொழிலாளர்களுடன் ஒரு ஆண் தொழிலாளியும் குளவிக்கொட்டுக்கு இலக்காகிய நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்து வந்துள்ளதாகவும் மேலும் பலர் தோட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும் தோட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன், மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாமிமலை தோட்ட பெரிய சூரியகந்தை பிரிவில் தேயிலை பறித்துக்கொண்டிருந்தபோது தேயிலைச் செடிக்கு அடியிலிருந்த குளவிக்கூடு கலைந்ததில் மூன்று பெண்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய நிலையில், மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாக மஸ்கெலியா மாவட்ட வைத்திய அதிகாரி லியத்தபிட்டிய தெரிவித்தார்.







இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று ஹட்டன் TKW மண்டபத்தில் இளைஞர், யுவதிகளுக்கான மாபெரும் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு பொதுஜன பெரமுனவின் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ சிறப்பு அதிதியாக கலந்துகொண்டதையும் இதன்போது வேட்பாளர்களான ராமேஸ்வரன், பிலிப்குமார், கணபதி கனகராஜ், சத்திவேல் ஆகியோர் உட்பட கலந்துகொண்டவர்களையும் இங்கு காணலாம்.

(படங்கள்: தலவாக்கலை)



அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

# வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் விஞ்ஞானஆய்வுகூடம்ஆளுநரால்திறந்துவைப்பு



(வவுனியா)

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலக வேலைத்திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூட திறப்புவிழா வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ஜெ.மனோ கௌரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முதன்மை அதிதியாக கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆய்வுகூடத்தை திறந்துவைத்தார்.

நிகழ்வில் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், கல்வி சிரேஷ்ட உதவிச் செயலாளர் அஞ்சலிதேவி சாந்தசீலன், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அன்னமலர் சுரேந்திரன், கல்வித் திணைக்களத்தின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# சிங்களப் பேரினவாதத்தின் அடக்குமுறைக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறவழியில் போராடுகின்றது

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

சிங்களப் பேரினவாதம் பல்வேறு வழிகளிலும், தமிழ் மக்கள் மீது மேற்கொள்கின்ற அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறத்தின் வழிநின்று போராடுகின்றது – என்று முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, அனிஞ்சியங்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்கள் மீது காலத்துக்குக்காலம் பல வழிகளிலும் அடக்குமுறைகளைப் பிரயோகித்துவருகின்றது.

குறிப்பாக, தற்போதும் தமிழர்களுக்கு வழங்கப்படவேண்டிய அரசியல் தீர்வு விடயத்திலுள்ள இழுபறிநிலை, வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் விடயத்திலுள்ள இழுபறிநிலை, தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பிலுள்ள இழுபறிநிலை, தமிழர்களுடைய நிலங்களை அபகரித்தல், தமிழர் நிலங்களில் அதிகரித்துள்ள பௌத்த மதத் திணிப்புகள், தமிழர்களின் பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் என பல்வேறு வழிகளிலும் சிங்களப் பேரினவாதம் தமிழர்கள் மீது அடக்குமுறைகளை பிரயோகித்துவருகின்றது.

அந்தவகையில் தமிழர்கள் மீதான இத்தகைய சிங்களப் பேரினவாதத்தின் அடக்குமுறைச் செயற்பாடுகளுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போராடிவருகின்றது. சிங்களத்தின் இத்தகைய அடக்குமுறைச் செயற்பாடுகளுக்கெதிராக கூட்டமைப்பு தொடர்ந்தும் போராடும்.

எனவே, தமிழ் மக்கள் அனைவரும் அறத்தின் வழிநின்று, ஒருமித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கவேண்டும் - என்றார்.



# இருப்பு ஒற்றுமை பற்றி வாய்கிழியப் பேசுவோர் சமூகப் பிரதிநிதித்துவங்களை ஒழிக்க முயற்சி

## ஓட்டமாவடியில் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்!





இருப்பு, ஒற்றுமை தொடர்பில் வாய்கிழியப் பேசிக்கொண்டிருப்போர், கல்குடாவின் சமூகப் பிரதிநிதித்துவத்தை எப்படியாவது இல்லாமலாக்கிவிட வேண்டுமென்ற திட்டத்துடன் செயற்படுவதாக மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மக்கள் காங்கிரஸ் தவிசாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின், மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளருமான அமீர் அலியை ஆதரித்து, நேற்றுமுன்தினம் மாலை (29) ஓட்டமாவடியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

"கல்குடாவின் பிரதிநிதித்துவத்தை எந்த வகையிலாவது இல்லாமல் செய்ய வேண்டுமென்று கடந்த காலங்களிலும் சூழ்ச்சிகள் இடம்பெற்றிருக்கின்றன. இம்முறையும் அது, புதிய பாணியில் அரங்கேற்றப்பட்டுள்ளது. சமூக ஒற்றுமை பற்றி சிலர் என்னதான் கூறினாலும் அவர்கள் உள்ளொன்று வைத்து, புறமொன்று பேசி வருகின்றனர். இவர்களின் இந்த நடவடிக்கைகளை கல்குடா மக்களாகிய நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். அவர்களின் ஆசை வார்த்தைகளில் மயங்கி, போலி வாக்குறுதிகளில் அகப்பட்டு, நமது கண்களை நாமே குத்திக்கொள்ளக் கூடாது. கல்குடாவில் இடம்பெறும் இந்தக் குழிபறிப்புக்கள் குறித்து, நீங்கள் விழிப்படையுங்கள்.

முன்னொரு கட்டத்திலே தேர்தலில் அமீர் அலி தோல்வியுற்றார் . அதன்மூலம் கல்குடா பிராந்தியத்தில் அரசியல் வெறுமை ஏற்பட்டது. நீங்கள் பல துன்பங்களை அனுபவித்திருக்கின்றீர்கள். அபிவிருத்தி, உரிமை சார்ந்த விடயங்கள் வறிதாகின.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உருவாக்கத்தில் தவிசாளர் அமீர் அலி முழுமூச்சாக உழைத்தவர். அதன் வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்பு நல்கியவர். கட்சியின் கொள்கைகளை என்னுடன் இணைந்து, நாடுமுழுக்க கொண்டுசென்று, பல பிரதேசங்களில் கட்சியை வேரூன்றச் செய்தவர். அதுமாத்திரமின்றி, சமூகப் பிரச்சினைகள், சமூகத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் மற்றும் கலவரங்களின் போதெல்லாம் என்னுடன் தோளோடு தோள் நின்று, அதற்கு எதிராக குரல் கொடுத்ததுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உதவியவர்.

கட்சியின் தவிசாளர் அமீர் அலி மும்மொழிகளிலும் பேசும் ஆற்றலைக் கொண்டவராக இருப்பதால், நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் சமூகத்துக்கான ஜனநாயகப் போராட்டத்தில் சளைக்காது ஈடுபட்டவர்.

பேரினவாதிகள் சிறுபான்மையினரின் வாக்குகளை சூறையாட மேற்கொள்ளப்படும் முயற்சி கல்குடாவில் நடைபெற்றுவரும் அதேவேளை, ஒற்றுமை பற்றி பேசும் இன்னொரு கட்சியினர், மட்டக்களப்பில் அமீர் அலியை எவ்வாறாவது தோற்கடிப்பதற்கான தந்திர அரசியலை முன்னெடுத்து வருகின்றனர். இதற்கு நீங்கள் இரையாகிவிடக்கூடாது.

அமீர் அலி வெறுமனே மாவட்டத்துக்கு மட்டுமான குரல் அல்ல. தேசிய பிரச்சினைகளிலும் சமூகப் பிரச்சினைகளிலும் தனது உயிரைக்கூட துச்சமாக மதித்து, களத்தில் நின்று பணியாற்றியவர். இனவாதத்தையும் மதவாதத்தையும் பிரதேசவாதத்தையும் கக்கி அரசியல்செய்யும் கலாசாரம், இந்த மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஓங்கியிருந்தது. எனினும், ஓட்டமாவடி, காத்தான்குடி, ஏறாவூர் என்ற பிரதேசவாத தடுப்புகளை அமீர் அலி உடைத்தெறிந்து சாதனை படைத்துள்ளார். காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ்வையும், ஏறாவூர் சுபைரையும் தேர்தல் ஒன்றின்போது இந்தப் பிரதேசத்துக்கு கொண்டுவந்து, அவர்களுக்கு விருப்பு வாக்கு வழங்க வித்திட்டவர். அதனைச் செயலிலும் காட்டியவர்.

அதுமாத்திரமின்றி, சமூக ஒற்றுமையை அவர் பெரிதும் மதித்தார். இன, மத நல்லிணக்கத்துக்கு பாடுபட்டது மாத்திரமன்றி, தமிழ்ச் சமூகத்தை அரவணைத்து, எந்த எதிர்பார்ப்புமின்றி அவர் ஆற்றிய பணிகள் காலத்தால் அழிக்கமுடியாதவை.

எனவே, எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கும் வல்லமையுள்ள அமீர் அலியை வெல்லச்செய்வதற்கு, கல்குடா மக்கள் ஒற்றுமையுடன் வாக்களிக்க வேண்டும்" - என்றார்.

இந்தக் கூட்டத்தில், ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்களான அப்துர் ரஹ்மான், அப்துல் லதீப் ஆகியோர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

# மஞ்சள் கடத்தியவர் மன்னாரில் கைது!



மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி ஓலைத்தொடுவாய் கடற்கரைப் பகுதியில் உலர்ந்த மஞ்சள்கட்டி மூடைகளுடன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு கடற்படையினரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடல் வழியாக கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்ட நபர்களின் வருகையைத் தடுக்கவும், தீவின் கரையிலிருந்து நடக்கும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தவிர்க்கவும் இலங்கை கடற்படை தொடர்ந்து கடற்பிராந்தியத்தில் விசேட ரோந்துப் பணிகளை மேற்கொண்டுவருகின்றது.

இதன்போது நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு ஓலைத்தொடுவாய் கடற்கரையில் கடற்படையினர் விசேட ரோந்துப் பணியில் ஈடுபட்டபோது கடல் மார்க்கமாக மன்னார் பகுதிக்கு கொண்டுவரப்பட்ட 20 மூடைகளில் பொதிசெய்யப்பட்ட சுமார் ஆயிரம் கிலோ கிராம் எடை கொண்ட உலர்ந்த மஞ்சள்கட்டி மூடைகளை கைப்பற்றியதோடு, சந்தேக நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார்.

மஞ்சள் மூடைகள் கடல் வழியாக மன்னாருக்கு கடத்தப்பட்டிருப்பது விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

மீட்கப்பட்ட உலர்ந்த மஞ்சள்கட்டி மூடைகள் சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, சந்தேக நபர் கொரோனா அச்சம் காரணமாக சுகாதார திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டார்.

# ஏகாம்பரம் காலமானார்



இலங்கையில் பிரபல சினிமா மேடை நடிகர் ஏகாம்பரம் காலமானார். இவர், நான் உங்கள் தோழன், அவள் ஒரு ஜீவநதி, எங்களில் ஒருவன் போன்ற திரைப்படங்களிலும் பரதன் பெற்ற பாதுகை, முருவல், தங்கப்பதக்கம் போன்ற நாடகங்களிலும் நடித்து புகழ்பெற்றவர் ஆவார். அண்மையில் அமைச்சர் மனோ கணேசனால் இந்து கலாசார திணைக்களம் மூலம் ஏற்பாடுசெய்யப்பட்ட பாராட்டு விழாவில் இவர் கலைமாமணி பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது இறுதிச்சடங்கு நேற்று மாலை 3.00 மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இடம்பெற்றது.



(இரத்தினபுரி)

**உலகம் பூராகவும் பரவி உயிர், பொருள், பொருளாதார சேதங்களை ஏற்படுத்திவரும் கொவிட் - 19 பாதிப்பிலிருந்து மக்களையும் உயிர்களையும் நாட்டையும் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஜனாதிபதி, பிரதமர், முப்படையினர், சுகாதாரத்துறையினர் ஆகியோருக்கு ஆசிவேண்டி இரத்தினபுரி நகரில் நேற்று முன்தினம் விசேட பூஜை நடைபெற்றது. இந்நிகழ்வை "ஸ்ரீலங்கா பொதுஜன சாந்திகர்ம அமைப்பு", "இரத்தினபுரி நாங்கள்" ஆகிய அமைப்பினர் மேற்கொண்டிருந்தனர்.**

# வவுனியா வாக்களிப்பு நிலையங்களில் குளவிக்கூடுகள்: அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை!

(வவுனியா)

வவுனியாவில் வாக்களிப்பு நிலையங்களாக அடையாளப்படுத்தப்பட்ட பாடசாலைகள் பலவற்றில் குளவிக்கூடுகள் காணப்படுகின்றன. வாக்களிப்புத் தினத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மழை, காற்று காலநிலையால் மக்களுக்கு இடையூறுகள் ஏற்படுமென அச்சம் வெளியிடப்படுவதால் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் - அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் இணைந்து குறித்த குளவிக்கூடுகளை அகற்றி மக்களுக்கும் தேர்தல் கடமைபுரியும் அலுவலகர்களுக்கும் பாதுகாப்பான சூழ்நிலையை தேர்தல் தினத்தன்று ஏற்படுத்தித் தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளனர்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவிலுள்ள பாடசாலைகளில் வாக்களிப்பு நிலையங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள போதிலும் சில பாடசாலைகளில் குளவிக்கூடுகள் காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் பாடசாலை மாணவர்கள் குளவித்தாக்கத்துக்கு இலக்காகியுள்ளதுடன், பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டு குளவிக்கூடுகள் அகற்றப்பட்டுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக, சாளம்பைக்குளம், ஈரப்பெரியகுளம், புதுக்குளம், சிதம்பரபுரம், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியலாயம் போன்ற பாடசாலைகளில் குளவிக்கூடுகள் காணப்படுகின்றன.

கடந்த ஆறு மாதகாலமாக பாடசாலைகளுக்கு நீண்ட விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளதால் பாடசாலையைச்சூழவுள்ள பகுதிகளிலுள்ள குளவிக்கூடுகள் தற்போதைய மழை காற்றுடனான காலநிலையால் கலைந்து வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லும் என்பதால் வாக்காளர்கள், கடமைபுரியும் அலுவலகர்களுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே, அமைதியான தேர்தலை நடத்துவதற்கு அதிகாரிகள் ஆவணஞ் செய்யவேண்டும்.

கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற தபால் வாக்களிப்பு நிலையமான வவுனியா பிரதேச செயலகத்துக்குச் சென்ற அரச ஊழியரொருவர் அங்குள்ள பனை மரத்தில் பாரிய குளவிக்கூடொன்றை அவதானித்துள்ளதுடன், அது குறித்து அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களின் கவனத்திற்குக்கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களிடம் கையளிக்கப்பட்ட வீடுகளின் மேல் கூரைகள் இடிந்துவிழும் ஆபத்து

(மன்னார் நகர்)

மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கென மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அமைதிபுரம் பெரியபண்டிவிரிச்சான் 47 வீட்டுத்திட்டம் என்னும் கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் நாளுக்குநாள் உடைந்துவிழும் நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

மடு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெரியபண்டிவிரிச்சான் கிழக்கு, மேற்கு மற்றும் சின்னபண்டிவிரிச்சான் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கென அமைதிபுரம் பெரியபண்டிவிரிச்சான் 47 வீட்டுத் திட்டம் என்னும் கிராமம் அமைக்கப்பட்டு 2013ஆம் ஆண்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வாறு கையளிக்கப்பட்ட வீடுகளுக்குள் மக்கள் குடிபுகுந்து ஒருசில நாட்களிலேயே அந்த வீடுகளின் கதவுகளில் போடப்பட்டிருந்த பூட்டுகள் கையோடு வந்ததாக மக்கள் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து சில மாதங்களில் சுவர்களில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில், தற்போது கூரை மரங்கள் இத்துப்போயுள்ளதால் சிறிய மழைக்கெல்லாம் மரங்கள், ஓடுகள் உடைந்து விழுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.



தற்போது பெய்துவரும் சிறு மழைக்கு இரண்டு வீடுகளின் கூரையின் சில பகுதி உடைந்து விழுந்துள்ளதாகவும், தங்கள் வீடுகளில் நோயுற்றவர்கள், குழந்தைகள், முதியவர்கள் வசித்துவருகின்ற நிலையில் எப்போது எங்களுக்கு மேல் கூரை இடிந்து விழுகிறதோ தெரியாது என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் மடு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் வினோஜிதா கணேஸை தொடர்புகொண்டு வினவியபோது,

குறித்த அமைதிபுரம் கிராம மக்களின் பிரச்சினைகள் தனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதாகவும், அதனைத்தொடர்ந்து குறித்த பகுதிக்குச் சென்று வீடுகளை நேரில் பார்வையிட்டதன் அடிப்படையில் அவர்களுக்கு புதிதாக வீடுகள் அமைப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறினார்.

# இன்றைய ராசி பலன்கள்

31.07.2020 (வெள்ளிக்கிழமை)

வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம்
சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

| | |
|---|---|
| மேஷம் - | தயக்கம் |
| ரிஷபம் - | கோபம் |
| மிதுனம்- | அன்பு |
| கடகம் - | வீரம் |
| சிம்மம் - | தாமதம் |
| கன்னி - | முயற்சி |
| துலாம் - | ஆதரவு |
| விருச்சிகம் - | பயம் |
| தனுசு - | பயனம் |
| மகரம் - | தரிசனம் |
| கும்பம் - | வரவு |
| மீனம் - | இலாபம் |

**சுப நேரம்**
காலை: 06.03 - 07.33
மாலை: 04.40 - 05.55

**இராகு காலம்**
10.33
12.03

**எம கண்டம்**
03.03
04.33

**வரலஷ்மி விரதம்**

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# இன, மத, பேதமற்ற சமத்துவமான அபிவிருத்தியை நோக்கிய பயணத்துக்கு வன்னி மக்கள் 5ஆம் திகதி என்னுடன் கைகோருங்கள்







"மக்கள் மத்தியில் நல்லதொரு ஆட்சி அமையவிருக்கின்றது. அதனை சரியான முறையில் கையாள்வதற்கு சிறந்த ஒரு துடிப்பான எதனையும் துணிச்சலாக எதிர்கொள்ளக்கூடிய ஒரு மக்கள் பிரதிநிதியொருவர் எமக்குத் தேவை இது காலத்தின் கட்டாயமாகியிருக்கின்றது. ஆகையால் இன, மத, பேதமற்ற சமத்துவமான அபிவிருத்தியை நோக்கிய பயணத்துக்கு அனைவரும் 5 ஆம்திகதி கைகோர்க்க வேண்டும்" என வன்னி மாவட்டத்தில் சுயேட்சைக் குழு -03 இல் மான் சின்னத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் நீல்சாந்த 'தமிழன்' இதழுக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் வழங்கிய நேர்காணல் முழுமையாக..

**கேள்வி : வன்னி மண்ணில் உங்களது பயணம் எவ்வாறு இருந்தது?**

**பதில் :** இது ஒரு சமூகசேவையான பயணம். இந்த சமூகசேவையில் ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் பல அரசியல் கட்சிகள், அரச நிறுவனங்களால் ஏற்படுத்திய குழப்பங்கள் காரணமாக தனித்துவமான கட்சியாக போட்டியிட முனைந்தபோதும் அது சாத்தியமற்றதாக இருந்தமையினால் சுயேட்சைக் குழுவாக போட்டியிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

**கேள்வி : நீங்கள் சுயேட்சையாக போட்டியிட்டு வெற்றிபெற்றால் உங்களது சேவை மக்களுக்கு எவ்வாறாக இருக்கும்?**

**பதில் :** கடந்த காலங்களில் பல உதவித்திட்டங்களை செய்து வந்துள்ளேன். அந்தவகையில் சிறுவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்கான கிராமங்களில் மாலைநேர வகுப்புகள் ஆரம்பித்தல், சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கல், பாடசாலைகளுக்கான தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கல், கிணறுகள், குழாய் கிணறுகள், கிராமங்களுக்கு விவசாய உற்பத்திப் பொருட்கள் வழங்குதல், குழுக்களுக்கு சுயதொழில் பயிற்சிகள், விவசாயிகளுக்கான விவசாயக்கிணறுகள், இளைஞர்களின் விளையாட்டுத்திறனை வளர்ப்பதற்கான பொருட்கள் மற்றும் மைதான புனரமைப்பு, பயிர்ச்செய்கைக்கான சோளம், குழாய் கிணறு, ஆலயங்களுக்கான உதவிகள், வயோதிபர்களுக்கான கண்ணாடி, இலைமறை காயாகவுள்ள இளைஞர்களை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் என பலவற்றை செய்தேன். இதன் மூலம் கல்வி, அபிவிருத்தி, மீன்பிடி, விவசாயம், சுயதொழில் என்பவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தேன். வன்னி மக்கள் காப்பகத்தினூடாக இந்த சேவைகள் அனைத்தையும் எனது சொந்தப்பணத்தில் செய்தேன். நான் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டால் தற்பொழுது நான் செய்யும் பணியை பலமடங்காக என்னால் செய்ய முடியும். அதனை தொடர்ந்து முன்னெடுப்பேன். ஆனால், அவ்வாறு செய்யும் போது எவ்வித தடைகள் ஏற்பட்டாலும் எங்களுடைய இந்த வேலைத்திட்டங்களுடன் எதிர்காலத்தில் தொடர்ந்து பயணிப்பேன்.

**கேள்வி : நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றால் யாருடன் இணைந்து பயணிப்பீர்கள்?**

**பதில் :** தேர்தலின் பின்னர் எந்தக்கட்சி அரச அதிகாரத்தில் இருந்து ஆட்சி அமைக்கின்றதோ அதனுடன் இணைந்து எனது பயணத்தை தொடர்வேன். தனித்து நின்று சமத்துவமான அபிவிருத்தியை அடைவது என்பது எட்டாக்கனி. ஆகையால் இணைந்து செயற்பட தீர்மானித்து இவ்விணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம்.

**கேள்வி : இணைந்து செயற்பட தீர்மானித்திருப்பதற்கான காரணத்தை கூறமுழயுமா?**

**பதில் :** அதற்கான காரணம் என்னெவெனில், கட்சி என்பதற்கு அப்பால் பல வேலைத்திட்டங்களை வன்னி மக்கள் காப்பகத்தின் ஊடாக செய்து வருகின்றோம். இவ்வேலைத்திட்டங்களை மக்கள் பிரதிநிதியாக வந்து இன்னும் அதிகமாக சேவை செய்யவேண்டிய கடமைப்பாடுள்ளது. இதனால் மக்களின் விருப்பத்திற்கு ஏற்பவே அரசியலில் இறங்கி இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றேன். இத்தேர்தலில் வெற்றிபெற்று மக்களுடனும் இணைந்து இன, மத, பேதமின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நான் சேவை செய்யவேண்டியுள்ளது. தற்போது அதிகளவிலான மக்கள் எமக்கு பின்னால் உள்ளனர். இதில் இன, மத, பேதமில்லாமல் எம்முடன் இணைந்துள்ளவர்களை பார்க்கின்றபோது மக்களுடனான எமது தொடர்பு நன்கு அனைவருக்கும் புலப்படும். அத்துடன் இன, மத பேதமின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கே நான் சேவை செய்து வருகின்றேன். என்னுடைய நாடாளுமன்ற வரப்பிரசாதங்களை மக்களுக்கே பயன்படுத்தவுள்ளேன். வாகன அனுமதிப்பத்திரம், சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகளை வன்னியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களது வாழ்வாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதே எனது நோக்கம். இன்றைய அரசியல்வாதிகளே மக்களை வறுமைக்கோட்டின் கீழ் வாழ வைத்துள்ளார்கள். வறுமையை ஒழிக்க வேண்டும். அதனை நிச்சயமாக என்னால் செய்யமுடியும். இதற்காகவே இணைந்து பயணிப்பேன்.

**கேள்வி : நீங்கள் வன்னியில் எவ்வாறான பிரச்சினைகளை இனங்கண்டு வருகிறீர்கள்?**

**பதில் :** போரால் பாதிக்கப்பட்ட வன்னி மாவட்டத்தில் மக்கள் படும் அவலநிலைகளை கண்ணால் கண்டுள்ளேன். வாழ்வதற்கான வாழிடம் இல்லாமல் பல மக்கள் கஷ்டப்படுகிறார்கள். குடிநீர் வசதி, விவசாயத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் இல்லாமை, சிறார்களின் கல்வி பாதிப்பு, இளைஞர் - யுவதிகளுக்கான வேலையில்லா பிரச்சினை, மீன்பிடி தொடர்பான பிரச்சினை என மக்களின் பிரச்சினைகள் பலவற்றை கூறிக் கொள்ளலாம். அவ்வாறான பிரச்சினைகளை இணங்கண்டு எம்மால் முடிந்தளவிலான உதவிகளை செய்து வருகின்றேன். அத்துடன், வன்னி மாவட்டத்தில் வேலை செய்கின்ற பலர் வேறு மாவட்டங்களில் இருந்து வந்து வேலை செய்கின்றார்கள். இந்த மாவட்டத்தில் படித்த பட்டதாரிகள் பலர் வேலையின்றி இருக்கிறார்கள். இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை இந்த மாவட்டத்திலேயே வேலை செய்வதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். நான் வென்ற பின் இதனைச் செய்து வன்னியில் மாற்றத்தைக் காட்டுவேன்.

**கேள்வி : நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானவுடன் முதலில் எவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பீர்கள்?**

**பதில் :** பல அரசியல்வாதிகள் அரசியலுக்கு வந்த பின் தான் பணக்காரார்கள் ஆகிறார்கள். ஆனால், எனக்கு அந்தத்தேவை இல்லை. நான் ஒரு வர்த்தகர். என்னிடம் தேவையான பணம் இருக்கின்றது. அதனால் தான் எனது சொந்த பணத்தை செலவுசெய்து சேவை செய்கின்றேன். எனக்கு வேண்டியளவிலான சொத்துகளும் இருக்கின்றன. இதனால் நாடாளுமன்றம் சென்று தான் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற தேவை இல்லை.

இந்த முறை மக்கள் எனக்கு சந்தர்ப்பம் தந்தால் 2025 ஆம் ஆண்டு நான் பிரசாரம் செய்யாமலேயே தேர்தலில் வெல்வேன். ஏனெனில், மக்களுக்கான தேவைகளை ஆட்சிக்கால 5 வருடங்களிலும் செய்து மக்கள் மனங்களில் ஒரு நிலையான தடம்பதிப்பேன்.

• நேர்காணல் : சிவகுமார் திவியா

# தமிழர்களை கரு அறுத்தவர்கள் ஆட்சிபீடம் ஏறிக்கொண்டு அரசியல் அதிகாரம் கேட்கிறார்கள்

## வங்காலையில் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவிப்பு



(மன்னார் நகர்)

தமிழர்களை கரு அறுத்தவர்கள் - எங்களை அழித்தவர்கள் இன்றைக்கு ஆட்சிபீடம் ஏறிக்கொண்டு எங்களிடம் அதிகாரம் கேட்கின்றார்கள்; ஜனநாயக ரீதியாக உரிமை கேட்கிறார்கள். ஒவ்வொருவரும் சொந்த நலனுக்காக எங்கள் மக்களை விற்கின்றார்கள். ஒரு சிலரை விலைக்கு வாங்கலாம். ஆனால், எங்கள் இனத்தை விலைக்கு வாங்க முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வன்னி நாடாளுமன்ற வேட்பாளருமான சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் வங்காலை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரிஷாட் பதியுதீன் தற்போது ஒரு பலமான ஆள் அல்ல. ஆனாலும் கடந்த தேர்தலில் தமிழ் மக்களுடைய வாக்குகள் கனிசமாக அவருக்கு விழுந்தது. மூன்று மாவட்டங்களிலும் ஒவ்வொரு தமிழரை வேட்பாளராக நிறுத்தி அவர்களுடைய வாக்குகளால் ரிஷாட் நாடாளுமன்ற உறுப்பினராக வருவார். இப்போது அதே வித்தையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பின்பற்றுகின்றது. மூன்று மாவட்டங்களிலும் தமிழ் வேட்பாளர்களை நிறுத்தி கட்சிக்கு வாக்கை பெற்றுக்கொள்வதற்கு முயல்கிறது. கடந்த தேர்தலில் ரிஷாட் பதியுதீனுக்கு கட்சி சார்பாக ஒரு போனஸ் ஆசனம் கிடைத்தது. தமிழர்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் வந்தவர் ரிஷாட் பதியுதீன் அந்த போனஸ் ஆசனத்தை ஒரு தமிழருக்கு அதை கொடுக்கவில்லை; மூன்று தடவைகள் மாறி மாறி முஸ்லிம் இனத்தவர்களுக்கே கொடுத்தார். புத்தளத்தை சேர்ந்தவருக்கு கொடுத்தார். அம்பாறையை சேர்ந்தவர்களுக்கு கொடுத்தார். ஏன் வன்னியில் கேட்ட வேட்பாளர்களுக்குக் கொடுக்கவில்லை? ஏனென்றால் அந்த ஆசனத்தை தமிழர்களுக்கு கொடுத்தால் முஸ்லிம்கள் ரிஷாட்டுக்கு வாக்களிக்கமாட்டார்கள்.

கடந்த முறை ரிஷாட் பதியுதீனின் கட்சியில் தேர்தலில் போட்டியிட்ட எந்தத் தமிழனுக்கும் முஸ்லிம்கள் வாக்களிக்கவில்லை இன்று பொதுஜன பெரமுனவில் கேட்கும் எந்தத் தமிழர்களுக்கும் முஸ்லிம்கள் வாக்களிக்கப்போவதில்லை. எந்த சிங்கள மக்களும் போடமாட்டார்கள். இதுதான் உண்மை. எங்களுடைய வாக்குகளை சிதறடித்துவிட்டு எங்கள் தனித்துவத்தை அழிக்க நினைக்கிறார்கள். ஏனென்று சொன்னால் இன்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இருக்கின்ற தீர்மானத்தை செயலிழக்கச் செய்யவேண்டும். அதை செயலிழக்கச் செய்யவேண்டுமாக இருந்தால் தமிழர்கள் தனித்துவமாக இருக்கக்கூடாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமாக இருக்கக்கூடாது. இதுதான் காரணம். இதற்காக பொய் வாக்குறுதிகள் வழங்குகின்றார்கள். எமது மக்களை தேர்தல் காலங்களில் ஏமாற்றுகின்றார்கள். ஏமாற்றி அதற்கான பலன்களையும் பெற்றிருக்கின்றார்கள்.

ஆனாலும் 2020 தேர்தலில் எங்கள் மக்கள் கூட்டமைப்பிற்கு முழுமையாக வாக்களிக்கவேண்டும். வாக்களித்தால் மட்டும்தான் எங்கள் தனித்துவத்தை தக்கவைத்துக்கொள்ளாம். எங்களுக்கு இம் முறை மிகப்பெரிய ஆபத்து இருக்கின்றது. தமிழர்களின் தனித்துவத்தை இல்லாதொழிப்பதற்காக எம்மின மக்களை அழிப்பதற்காக எமது மக்களிடமே ஜனநாயக உரிமையை பெற்றுக்கொள்ள துடிக்கின்றார்கள். பணபலம், பொய் வாக்குறுதிகளை வழங்குகின்றார்கள். எனவே, மக்கள் இம்முறை எமது இருப்பை பாதுகாப்பதற்கு ஒன்றிணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் என்றார்.

# விபத்தில் ஒருவர் பலி; மற்றவர் படுகாயம்!

(யாழ் நிருபர்)

வரணியில் நேற்று முன்தினம் விபத்தில் சிக்கிய இளைஞர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வரணியில் நேற்று முன்தினம் தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிளில் இரண்டு இளைஞர்கள் பயணித்தனர். இதன்போது வீதியில் பொலிஸாரின் வாகனம் வருவதை கண்டு, அதிவேகமாக தப்பியோடியுள்ளனர்.

கொடிகாமம்- பருத்தித்துறை வீதியை கார்பட் வீதியாக மாற்றும் பணிகள் இடம்பெற்று வந்த நிலையில் வீதி அபிவிருத்தியில் ஈடுபடும் நிறுவனத்தின் ரிப்பர் வாகனத்துடன் வரணி வைத்தியசாலையின் முன்பாக மோதி விபத்திற்குள்ளாகினர்.

இடைக்குறிச்சி வரணியைச் சேர்ந்த



பிரான்சிஸ் சைனிஸ் (வயது 26), யோகேந்திரன் கோகுலன் (வயது 26) ஆகிய இருவரும் படுகாயமடைந்து, வரணி வைத்தியசாலையிலிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்த நிலையில், படுகாயமடைந்த இளைஞர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.




# கசிப்பு மற்றும் ஹெரோயின் வைத்திருந்த நால்வர் கைது!

(யாழ் நிருபர்)

கசிப்பு மற்றும் ஹெரோயின் போதைப்பொருட்களை தம்வசம் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் நான்கு பேர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். நகரப்பகுதியில் சட்டவிரோதமான கசிப்பை தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சுன்னாகத்தைச் சேர்ந்த நபரொருவரையும் இரண்டு மில்லிகிராமுக்கு குறைவான ஹெரோயின் போதைப்பொருட்களை தம்வசம் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில்



யாழ். குருநகர் பகுதியில் மூவரையும் கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# வாள்வெட்டுத் தாக்குதலுக்குத் தயாரான இருவர் சந்தேகத்தின்பேரில் கைது!

(யாழ் நிருபர்)

வாள் வெட்டுத் தாக்குதலுக்கு தயாராக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் கோப்பாய் பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து கூரிய ஆயுதங்களும் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கோப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞர் குழுவொன்று கூடியுள்ளதாக அப்பகுதி மக்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றபோது குறித்த இளைஞர் குழு அவ்விடத்திலிருந்து தப்பித்துச் செல்ல முற்பட்டுள்ளது. இதன்போது பொலிஸார் துரத்தியதில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர்களிடமிருந்து இரும்புக் கம்பிகள், கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# தனிநபர் வழிப்படுத்தலுக்குள் சிக்கித்தவிக்கும் முஸ்லிம் சமூகத்தை மீட்க வேண்டிய காலமிது

## -மக்கள் ஜனநாயக முன்னணியின் செயலாளர் அஸீஸ்

(அட்டாளைச்சேனை)

காட்டிக் கொடுப்புகளும் கழுத்தறுப்புகளும் மலிந்துபோயுள்ள முஸ்லிம் சமூக அரசியலின் இன்றைய படுமோசமான தனிநபர் வழிப் படுத்தல்களுக்குள் சிக்கித் திணறும் முஸ்லிம் சமூகத்தை மீட்கவேண்டியது காலத்தின் தேவையாகும் என திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழு-06இல் போட்டியிடும் பிரதம வேட்பாளரும், மக்கள் ஜனநாயக முன்னணியின் செயலாளர் நாயகமுமான எம்.வை.ஏ.அஸீஸ் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நமது சிறுபான்மைச் சமூகத்தினர் இந்நாட்டில் தலைநிமிர்ந்து வாழவேண்டுமாக இருந்தால் சுயநல அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து நம் சமூகத்தினர் முதலில் விடுபட வேண்டும். காலத்திற்குக் காலம் தேர்தல் வருகின்றபோது சமூக அக்கறை கொண்டவகள் போல் நீலிக்கண்ணீர் வடிக்கும் சுயநல அரசியல்வாதிகளின் முகத்திரையை நாம் கிழிக்கவேண்டும்.

நமது எதிர்கால தலைமுறையினருக்கு புதிய வழிகாட்டுதல்களையும் உரிமைக்கான புதிய பாதைகளையும் பெற்றுக்கொடுப்பதற்காக முற்போக்குமிக்க மனிதர்களால் நாம் சுயேட்சையாக பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை முன்னெடுத்துவருகின்றோம்.

எமது அமைப்பில் ஏமாற்றுபவர்களும் இல்லை, ஏமாறுபவர்கள் இல்லை. அபிவிருத்தி என்றும் உரிமை என்றும் பேசிப் பேசி காலத்தைக் கடத்தும் கட்டமைப்புகளும்



எம்மிடமில்லை. எமக்காக நாம் என்ற கோஷத்துடன் ஒன்றித்து, சிந்தித்து இயங்கவுள்ள இத்தருணத்தில், தனிநபர் அதிகார வேட்டைக்காரர்கள் மத்தியிலிருந்து சிந்தனைமிக்க, சுயகௌரவம் மிக்க நபர்களால் தோற்றுவிக்கப்பட்டுள்ள இவ்வியக்கத்தில் அனைவரும் ஒன்றித்துப் பயணிப்போம்.

எமது நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து நமது முஸ்லிம் சமூகம் அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்துவருகின்றது. இருந்தபோதிலும் நாடு சுதந்திரம் பெற்றதுமுதல் முஸ்லிம் சமூக அறிஞர்கள் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டபோது, தன்னலம் கருதாது ஆட்சியாளர்களுடன் இணைந்து நமது முஸ்லிம் சமூகம் சார்ந்த விடயங்கள் பலவற்றை செய்துவந்துள்ளனர். இவர்களது அரசியல் அணுகுமுறையானது உரிமைசார் அரசியலாக இல்லாவிட்டாலும் சலுகை அரசியலாக சமூகத்தின் பல தேவைகளை பூர்த்திசெய்துள்ள வரலாறுகளை நாம் காண்கின்றோம்.

மறைந்த பெருந்தலைவர் நமது முஸ்லிம் சமூகத்தின் பல்வேறு அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை ஸ்தாபித்து சமூகம்சார் உரிமைகள், அபிவிருத்திகள் என பல்வேறு விடயங்களை செய்துகாட்டியதுடன், ஏனைய சமூகத்தவர்களுக்கும் பல சேவைகளையும் பாகுபாடற்ற விதத்தில் செய்துகாட்டியுள்ளார்.

மறைந்த பெருந்தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபின் மறைவுக்குப் பின்னர் இக்கட்சி பல கூறுகளாக பிரிவுபட்டு ஒவ்வொரு தலைமைகளின் கீழ் ஒவ்வொரு திசையிலும் இக்கட்சிகள் பயணித்துக்கொண்டிருக்கின்றன. இக்கட்சிகள் மறைந்த தலைவரின் வழியில் பயணிக்கவில்லை. அதனாலேயே பல்வேறு துறைசார்ந்தவர்களை ஒன்றிணைத்து நாம் மக்கள் ஜனநாயக முன்னணி என்ற பெயரில் சமூக மாற்றத்தை நோக்கி கட்சியொன்றை உருவாக்கி செயற்பட்டு வருகின்றோம் - என்றார்.

# இராஜதந்திர ரீதியில் தமிழ் மக்களின் நலனுக்காக சம்பந்தன் பாடுபடுகின்றார்

## -கோணேஸ்வரன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியவர்களில் கருணா அம்மானுக்கும் பங்குள்ளது. இவ்வாறு ஜனநாயக போராளிகள் கட்சியின் கொள்கைபரப்புச் செயலாளர் ப.கோணேஸ்வரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் எவ்வாறு வாக்களிப்பதென்பது தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாற கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கருணா அம்மான் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தபோதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. எனவே, கூட்டமைப்பு உருவாக்கத்தில் அவருக்கு பங்குள்ளது. ஆனால், இவ்வாறு கூட்டமைப்பை உருவாக்கிவிட்டு அவர் தலைவரின் பாதையில் பயணிக்கவில்லை. வேறு நிகழ்ச்சிநிரலில் பயணிக்கின்றார். எனவே, இதில் அவரை சம்பந்தப்படுத்தத் தேவையில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர் அல்ல. அமைப்பில் இணைந்து சயினைட் குப்பி அணிந்து போராடியவர் அல்ல. கூட்டமைப்பின் தலைவராகவே நியமிக்கப்பட்டிருந்தார். அவர் பல நாடுகளுக்குச் சென்று இராஜதந்திர நடவடிக்கைக்காக சென்று பலவாறு பேசி வருபவர். இதனால் பல வடிவங்களில் தனது கருத்தை முன்வைத்து வருகின்றார்.அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரபாகரன் உருவாக்கவில்லை என கூறமுடியாது. எனவேதான் சம்பந்தனுக்கு இவ்வாறு கதைக்க வேண்டிய தேவையுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# திருமலையில் தேர்தல் பணிக்கான பயிற்சிகள்

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்காக வலய உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் வாக்கெண்ணும் பணிகளுக்கான உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களாக தெரிவுசெய்யப்





பட்டவர்களுக்கான பயிற்சி வகுப்பு நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன தலைமையில் நடைபெற்றது.

பொறுப்புவாய்ந்த கடமையான தேர்தல் கடமையை கடந்த காலங்களில் செவ்வனே செய்ததுபோன்று இம்முறையும் செவ்வனே நிறைவேற்றுமாறும் கொவிட் - 19 தொடர்பான வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கேற்ப சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இத்தேர்தல் கடமைகளை நிறைவேற்றுவதை ஆவணஞ்செய்யுமாறும் இதன்போது மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் வேண்டிக் கொண்டார்.

அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் நம்பிக்கையை மேலும் கட்டியெழுப்பும் வகையில் நாம் அனைவரும் செயற்படல் வேண்டும். மக்கள் அச்சமின்றி வற்புறுத்தலின்றி வாக்களிப்பதற்கான சூழலை நாம் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். வழங்கப்பட்ட கடமைகள் மற்றும் பொறுப்புகளை அர்ப்பணிப்புடன் செய்யவேண்டும் என்றும் இதன்போது தெரிவத்தாட்சி அலுவலர் தெரிவித்தார்.

இப்பயிற்சி தொடர்பான மேலதிக விளக்கங்கள் கிழக்கு மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.சுதாகரனால் வழங்கப்பட்டது.

# மண்ணெண்ணெய் தெளிக்கப்பட்ட சாரைப்பாம்புபோல கருணாவைக் கண்டு எதிரிகள் அஞ்சி ஓடுகின்றனர்

## தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் முன்னாள் எம்.பி. குணசேகரம் சங்கர்

(காரைதீவு)

சிதறிக்கிடந்த தமிழ்ச் சமுகத்தை ஒரு குடையின்கீழ் ஒனறுசேர்த்திருக்கிறார் கருணா அம்மான். எனவே, தமிழ்மக்களின் ஒரே தெரிவு கருணா அம்மானைத்தவிர, வேறு யாரும் இருக்கமுடியாது.

ஒருசில முஸ்லிம் தலைவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அம்மானின் வருகைகண்டு தலை குழம்பிப்போயுள்ளனர். மண்ணெண்ணெயைக்கண்ட சாரைப்பாம்பு போல அவர்கள் தலைதெறிக்க ஓடுகின்றனர். அஞ்சி பிதற்றுகின்றனர்.

இவ்வாறு முன்னாள் அம்பாறை மாவட்ட எம்.பி. குணசேகரம் சங்கர் தெரிவித்தார்.

காரைதீவில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணித் தலைவரும் அகில இலங்கை தமிழர் மகாசபை திகாமடுல்ல மாவட்ட வேட்பாளருமாகிய கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை ஆதரித்து அ.இ.த. மகாசபையின் தேர்தல் பிரசாரக்கூட்டம் வேட்பாளர் தி.ஞானேந்திரன்(வின்சன்) தலைமையில் காரைதீவின் தெற்கெல்லையில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது;

காரைதீவில் இறக்குமதிசெய்யப்பட்டவர்கள் சிலரைவைத்து த.தே.கூ. கூட்டமொன்றில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தை முன்னாள் எம்.பி. பத்மநாதன் பிரித்துக் கொடுத்ததாக அங்கிருந்த தவிசாளரான கலையரசன் பேசியிருக்கிறார்.

உண்மையில் அவரொரு தவிசாளராக வருவதற்கு நான் காரணமாய் இருந்திருக்கிறேன்



எனும்போது மகிழ்ச்சியாகவுள்ளது. ஆனால், அவர் கூறிய அண்டப்புழுகை நினைத்து பாவப்படவேண்டியுள்ளது.

நாவிதன்வெளி பிரதேச செயலக உருவாக்கம் என்பது இருட்டுக்குள் மூடி மறைத்து நடந்ததொன்றல்ல. நான் எம்.பி.யாக இருந்தபோது உள்ளூராட்சி அமைச்சில் அனுமதி எடுத்து அங்கிருந்தவந்த கல்வெட்டை நானே திறந்துவைத்தேன். அதற்கான ஆவணங்கள் இன்றும் உள்ளன. இந்தப் பிரதேச செயலகம் திறக்கப்படுகின்றபோது பத்மநாதன் எம்.பி.யே இல்லை என்ற விடயம் கூட இந்த கற்றுக்குட்டிக்குத் தெரியாது என்பதுதான் வேடிக்கையான விடயம்.

கோடீஸ்வரன் இதே காரைதீவு மண்ணில் வைத்து விஞ்ஞாபனத்தை வெளியிட்டு தனது முழு மாதவருமானத்தையும் கல்விக்கே செலவழிப்பேன் என்று பகிரங்கமாக தெரிவித்தார். அது ஊடகங்களிலும் வெளிவந்தன.

ஆனால், கடந்த நாலரை வருடத்துக்குள் அவ்விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டவற்றுள் ஒன்றையாவது அவரால் செய்யமுடிந்ததா? அல்லது கல்விக்கு ஒரு சதமாவது வழங்கியுள்ளாரா? 9ஏ 3ஏ புலமைப்பரிசில் சித்திபெற்ற பிள்ளைகளுக்கு ஒரு டொப்பியையாவது வழங்கினாரா?

இவ்வாறு மக்களை முற்றாக ஏமாற்றவிட்டு இன்று மீண்டும் அதே தேசியம் கதைத்து வருகிறார். இம்முறை அவருக்கு மக்கள் கொடுப்பது அல்வா. இப்போதே எழுதி வைத்துக்கொள்ளுங்கள், அவர் தோற்பது 100 வீதம் உறுதியாகிவிட்டது.

எமது அணியில் போட்டியிடும் அம்மான், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகிறார். அவரோடு போட்டியிட்ட ஒன்பது பேரையும்கொண்டு இங்கு நிழல் அமைச்சரவையை அமைத்து ஒவ்வொரு துறைகள் பொறுப்பளிக்கப்பட்டு அவர்களினூடாகவே அவ்வேலைகள் நடத்தப்படவிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, மக்களுக்கான வேலைத் திட்டம் மாதரீதியில் திட்டமிடப்பட்டுள்ளன. அவ்வப்போது அது நடைபெறும். இவர்கள் தினமும் 12மணிநேரம் மக்களுக்காக சேவை செய்யவேண்டும். ஒவ்வொரு தமிழ்க்கிராமமும் அபிவிருத்திசெய்யப்படும்.

எனவே, இம்முறை எமக்கு சந்தர்ப்பம் தந்தால் தமிழர் பிரதேசம் வளமடையும். மேலும் கிழக்கு மாகாண சபையில் எமது கட்சிசார்பில் இங்கிருந்து நால்வர் தெரிவாவதோடு, ஒருவர் அமைச்சராகவும் வர வாய்ப்பிருக்கிறது. அதற்கான திட்டத்தை வகுத்திருக்கிறோம். இணையுங்கள் வாழ்வோம் - என்றார்.

# வினோகாந்த் அம்பாறையில் தமிழ் பிரதிநிதிக்குரிய வெற்றிடத்தை நிரப்புவார்

## புதியவளத்தாப்பிட்டியில் முன்னாள் அமைச்சர் தயாரத்ன

(காரைதீவு)

ஏழைகளுக்கு அளப்பரிய சேவையாற்றி மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடித்த முன்னாள் ஜனாதிபதி அமரர் ரணசிங்க பிரேமதாஸவின் மகன் முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ வழியில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்காக சேவைசெய்யப் புறப்பட்ட இளம் தலைவர் வினோகாந்துக்கு






ஆதரவளிப்பதன் மூலம் உங்களையும் உங்கள் பிரதேசத்தையும் வளப்படுத்திக்கொள்ளலாம்.

- இவ்வாறு அம்பாறை மாவட்டத்தின் மூத்த அரசியல்வாதியும் முன்னாள் அமைச்சருமான பி.தயாரத்ன புதியவளத்தாப்பிட்டியில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிடும் ஒரேயொரு தமிழ் வேட்பாளர் வெள்ளையன் வினோகாந்த்தை ஆதரித்து அவரது ஊரான புதியவளத்தாப்பிட்டியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அங்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மாகாண சபை தவிசாளராகவுமிருந்த சந்திரதாச கலப்பதியும் சமூகமளித்திருந்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 90வீத தமிழ்மக்கள் எமது தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கே வாக்களித்தனர். இன்றும் அம்மக்கள் சோர்ந்துபோகாமல் தலைவர் சஜித்தின்மீது நம்பிக்கைவைத்து பிரதமராக அழகுபார்க்க எண்ணுகின்றனர். அதேபோன்று சிறப்பான சேவைசெய்த - செய்யக்கூடிய இளம் தலைவர் வினோகாந்தை எம்.பி.யாக்க முனைவது காலத்தின் தேவையாகும். மும்மொழியிலும் தேர்ச்சியுள்ள இவர் சேவைசெய்வதில் முன்னனுபவம் உள்ளவர்.

சஜித் பிரேமதாஸ அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ் மகனை நம்பி தேர்தலில் இடம்கொடுத்தாரென்றால் வினோகாந்தின் திறமை மகத்துவத்தை இங்கு சொல்லவேண்டிய அவசியமில்லை. அதற்கமைய அவரைத்தான் நானும் நூறுவீதம் சிபாரிசு செய்கிறேன்.

ஏழை மக்களுக்கு ஜனசவிய வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியவர் பெருந்தலைவர் அமரர் பிரேமதாச. அவரொரு செயல்வீரன். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? எனவே, அவருடைய மகன் சஜித் பிரேமதாசவும் அதே பாணியில் மக்களுக்கான வீட்டுத் திட்டங்களை முன்னெடுத்துவருகிறார்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தலைவரொருவரை உருவாக்க நினைத்துக்கொண்டிருந்தோம். இந்தக் கட்டத்தில்தான் வல்லமைமிக்க வினோகாந்தை சஜித் நியமித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளில் தமிழ்மக்கள் செறிந்துவாழ்கிறார்கள். அங்கு குடிநீர்ப் பிரச்சினை காலாகாலமாக இருந்துவருகிறது. யாரும் தீர்ப்பாரில்லை.. இதுவரை வந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் இப்பிரச்சினையை தீர்க்கவில்லை.

குறிப்பாக குண்டுமடு, செல்வபுரம், தாண்டியடி கண்ணகிகிராமம், மண்டானை காயத்திரிகிராமம், கோமாரி மல்லிகைத்தீவு மத்திய முகாம், பெரியநீலாவணை போன்ற பிரதேச தமிழ்மக்கள் வரட்சிக்காலத்தில் குடிநீரின்றி சொல்லொணா கஷ்டத்தை அனுபவித்துவருகிறார்கள்.

மல்லிகைத்தீவுக் கிராமத்தில் நிலவிய குடிதண்ணீர்ப் பிரச்சினையால் சிறுநீரகநோய் ஏற்பட்டு சிலர் அநியாயமாக இறந்தனர். அத்தனை அனர்த்தம் நிகழ்ந்தும் இங்குள்ள தமிழ் எம்.பி. அங்கு செல்லவில்லையென அம்மக்கள் அழுதனர். இப்படிப்பட்டவர்களையா இன்னுமின்னும் நாம் தெரியவேண்டும்.

எனவே, முதலில் இக்குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கவேண்டுமென்பதே தம்பி வினோகாந்தின் அவா. பின்னர் ஒவ்வொரு தேவையையும் தலைவர் சஜித்தின் துணைகொண்டு நிச்சயமாக அவர் தீர்த்துவைப்பார் - என்றார்.




# தமிழர் - முஸ்லிம்களை பிரிக்கப்பார்க்கும் தந்திரம் இம்முறை பலிக்கப்போவதில்லை

## வேட்பாளர் அமீர் அலியை ஆதரித்து வடிவேல் சுரேஷ் உரை



நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் ஒரு ஆபத்தான தேர்தலாக அமையவுள்ளது. அதில் சிறுபான்மை மக்கள் அனைவரும் நிதானமாக சிந்தித்து வாக்களிக்க வேண்டும் - என்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வேட்பாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் அமீர் அலியை ஆதரித்து வாழைச்சேனை - பிறைந்துறைச்சேனையில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

நடைபெறவுள்ள தேர்தல் ஒரு விசித்திரமான, போர்க்களமான தேர்தலாக அமையவுள்ளது. முஸ்லிம் சமூகத்தின் மீது எவ்வாறான தடைகளைப் போடலாம், எப்படி சட்டத்தை மாற்றலாம், எப்படி வியாபார ஸ்தலங்களில் கைவைக்கலாம், எவ்வாறு பள்ளிவாசல்களில் கைவைக்கலாம், மதத்தின் வளர்ச்சியை எவ்வாறு குறைக்கலாம் என்பதுபற்றி சிந்திக்கின்றனர். அவ்வாறனவர்களுக்கு சோரம்போனவர்களாக இருந்தால் சமூகத்தின் துரோகிகளாக நாங்கள் ஆகிவிடுவோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபாய ராஜபக்ஷ வெற்றிபெற்று பதவியேற்றவுடன் நான் சிறுபான்மை மக்களின் வாக்குகள் இல்லாமலே வெற்றிபெற்றுள்ளேன் என்று கூறினார், அதை அவர் சிறுபான்மை மக்களுக்கு விடுத்த எச்சரிக்கையாகவே நான் பார்க்கிறேன்.

எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரிக்கத்தான் பார்க்கிறார்கள். அப்படி பிரித்தால்தான் அவர்கள் அனைத்து விடயங்களையும் இலகுவாக செய்யமுடியும். ஆனால், அந்தப் பருப்பு இந்த முறை வேகாது, அந்த தந்திரம் இந்த முறை பலிக்கப் போவதுமில்லை. இந்த முறை தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக ஒரே அணியில் நின்று செயற்படுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க சரியாக இருந்திருந்தால் இன்று இந்த நாட்டின் ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ இருந்திருப்பார். ரணில் எட்டப்பன் வேலை செய்ததால் இந்நாட்டில் இனவாதம் ஓங்கிநிற்கிறது.

எனவே, எதிர்வரும் 5ஆம் திகதியானது சிறுபான்மைச் சமூகத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் நாளாக அமையவுள்ளது. அரிசிக்கும் பணத்துக்கும் நாம் சோரம் போகாமல், சலுகை அரசியல் பக்கம் செல்லாமல் உரிமை அரசியல் பக்கம் சென்று அனுபவம் கொண்ட அரசியல் தலைவர்களை தெரிவு செய்வோம் - என்றார்.



# சீத்துவக்கேடு 35


காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

வாதம், பித்தம், கபம் இந்த மூன்றையும் சமநிலையில் வைச்சிருக்கிற முக்கியமான வேலையை பழஞ்சோறு இல்லாட்டில் பழஞ்சோத்து தண்ணி செய்யுது எண்டு எங்கட பரியாரி துரைப்பெடி சொல்லுறவர் எண்டு அப்பு சொல்லுவார்.

ஆத்து நீர், வாதம் போக்கும. அருவி நீர், பித்தம் போக்கும். சோத்து நீர் இரண்டையும் போக்கும் எண்டு எங்கட பழைய ஆக்கள் சொல்லிறவை எல்லே மறந்து போனியே எண்டு ஆச்சி சொல்லுவா.

இப்ப ஊரை விட்டு நாட்டை விட்டு பற்றி படிச்ச ஆக்கள் சொல்லுகினம்.

எப்பிடி உந்த தானியங்கள் முளைகட்டின பிறகு பலமடங்கு சக்தியும், சத்துகளும் நிறஞ்சதாய் மாறுதோ அதுமாதிரித்தான் பழஞ்சோறு தண்ணியிலை கிடந்து நொதிக்கேக்கை அதில இருக்கிற சத்து நல்லா கூடும் எண்டு அப்பு சொல்லுவார். உடன ஆச்சி அதுதானாக்கும் நீயும் தண்ணியில கிடக்கேக்கை நொதிச்ச மாதிரி கிடக்கிறனியோ எண்டுவா.

ஏனடி நீ தேவை இல்லாமல் குதிக்கிறதாலதானே தானேடி நான் தண்ணியிலை கிடந்தது நொதிக்கிறனான். அது சரி நான் என்ன உன்ரை கொப்புவின்ரை காசிலையே குடிக்கிறான் எண்டுவார்.

> **“ஆத்து நீர் – வாதம் போக்கும.**
> **அருவி நீர் – பித்தம் போக்கும்.**
> **சோத்து நீர் – இரண்டையும் போக்கும்”**

உடன ஆச்சி மூஞ்சியை நீட்டிக் கொண்டு குந்தில குந்தி இருப்பா.



உப்பிடி உந்த பக்டீரியாக்கள் பழஞ்சோத்தில எக்கச் சக்கமா இருக்கிறதால, சாப்பிடுகிற ஆக்களுக்கு பலவகையான வயிறு, குடல் நோய்கள் வராமல் தடுக்க ஏலும் எண்டுகினம்.

அதுமட்டுமில்லை பழஞ்சோத்தில அதிகமாக நோய் எதிர்ப்புச் சக்தியும் இருக்குதாம் எண்டுகினம். உதாலதான் முந்தி எங்கட பழஞ்சோறு திண்ட ஆக்கள் கண்ட கிண்ட வருத்தம் ஒண்டும் இல்லாமல் நல்ல ஆரோக்கியமா இருந்தவையாக்கும்.

உப்ப கிட்டத்தில அமெரிக்கன் நியூட்ரிஷன் அசோசியேஷன் எண்டு என்னமோ ஒரு அமைப்பு ஒண்டு பழஞ்சோத்தை சாப்பிட்டால் என்ன என்ன நன்மை எண்டு ஒரு பெரிய பட்டியல் போட்டிருக்கிறானாம்.

பழஞ்சோத்தில கூட நார்ச்சத்து இருக்கிறதால மலச்சிக்கலுக்கு நல்லம். அதோட உடல் சோர்வையும் இருந்த இடம் தெரியாமல் துரத்தும் எண்டும் அமெரிக்காகாறன் சொல்லுறான்.

அதோட பழஞ்சோறு சாப்பிட்டால் உயர் ரத்த அழுத்தம் குறையும். அலேர்ஜிக் பிரச்சினை குறையும். தோல் நோய்களுக்கு நல்லம். எல்லாவிதமான அல்சருக்கும் நல்லம்.

புது நோய் தொற்று வராமல் தடுக்கும். இளமைத் தோற்றத்தை தரும், நல்ல பொலிவைத் தரும் எண்டும் அவங்கள் சொல்லுறாங்கள்.

உதுகளைக் கேட்ட பிறகு எங்கட வெளிநாட்டில இருக்கிற கன பெண்டுகள் என்னண்டு பழஞ்சோறு செய்யிறது, என்னண்டு பழஞ்சோறு சாப்பிடுகிறது எண்டு செய்தியளைப் பாக்கிறதுக்கெண்டு கூகிளை இப்ப கிண்டிக் கிளறுகினம்.

உவையெல்லாம் எங்கட அப்பு ஆச்சி பழஞ்சோத்தை பற்றி சொல்லேக்கை நக்கலா இளக்காரமாப் பாத்து மூஞ்சையை திருப்பிக் கொண்டு நியுசென்ஸ் எண்டு போட்டு இப்ப அமெரிக்காகாரன் சொல்லிப் போட்டான் எண்டு பழஞ்சோத்துக்கு அலையினம்.

காலமை இந்தப் பழஞ்சோறு சாப்பிட்டால் வயித்தில சூட்டால வாற கன வருத்தங்கள் குணமாகும். அதை மாதிரிபழஞ்சோத்து தண்ணி ஒரு மூக்குப் பேணி குடிச்சால் மேலால கீழால புசு புசுவெண்டு விடுகிற வாய்வுத் தொல்லைகாரருக்கு அந்தக் கரைச்சல் இல்லாமல் போகும் எண்டு துரைப் பெடி பரியாரி சொல்லுறவர் எண்டு அப்பு சொல்லுவார்.

வெள்ளைக்காரன் வந்து கோப்பி தேத்தண்ணியை எங்கடை ஆக்களுக்கு அறிமுகப்படுத்த முதல் அவை முந்தி நீராகாரம் எண்ட பழஞ்சோத்து தண்ணியைத்தான் வெங்காயத்தையும் பச்சை மிளகாயையும் கடிச்சுக் கொண்டு குடிச்சவை. அதால ஒரு வருத்தம் வாதை ஒண்டும் இல்லாமல் இருந்தவை. இப்ப கோப்பி தேத்தண்ணியோடை வெள்ளைக்காரன் கொண்டுவந்த நுரைக்கிற சோடா வகையளுக்குப் பின்னால திரியினம்.

வெள்ளைக்காரன் என்னடாவேண்டால் எங்கட பழஞ்சோத்துக்கும் பழஞ்சோத்து தண்ணிக்கும் பின்னால திரியிறான்.

இப்பவும் எங்கட கிழடுகட்டை ஆரையும் என்ன ஒரு வருத்தம் வாதை ஒண்டும் இல்லாமல் நல்லா இருக்கிறியள் எண்டால், ஒண்டுமில்லையடா மோனை உந்த கஞ்சித் தெளிவும் பழஞ்சோறும் பழஞ்சோத்து தண்ணியும்தான் காரணம் எண்டு சொல்லுவினம்.

அதால காச்சின சோறு மிஞ்சிப் போட்டுது எண்டால் அதைப் பிரிஜ்ஜுக்கை அடைஞ்சு வைச்சு பிறகு அடுத்தநாள் எடுத்து சூடாக்கி சாப்பிடாமல் ஒரு மண் பானையுக்கை போட்டு தண்ணி ஊத்தி வைச்சால் அடுத்த நாள் பழஞ்சோறா சாப்பிடலாம். இல்லாட்டில் பழஞ்சோத்து தண்ணி கரைச்சுக் குடிக்கலாம் எண்டுதான் நான் சொல்லுவன்...

அங்கையும் இஞ்சையுமாய் இருக்கிற கனபேருக்கு உந்தப் பழஞ்சோறு என்னண்டு செய்யிறது எண்டு தெரியாது. சிலர் பிரிஜ்யுக்கை சோத்தை வைச்சு அடுத்தநாள் எடுத்து அதைப் பழஞ்சோறு எண்டுவினம்.

எங்கடை ஆச்சி சோத்துப் பானையுக்கை தண்ணியை ஊத்தி மூடி உறியில வைப்பா. அடுத்த நாள் காலமையில அது புளிச்சுப்போய் பழஞ்சோறா இருக்கும். இதில முக்கியம் என்னவெண்டால், இலக்டிக் அமில பக்டீரியாக்கள் சோத்தில இருக்கிற ஊட்டச்சத்து எதிர்ப்புக் காரணிகளை சுக்குநூறா உடைச்சு எங்கட உடம்பு ஒரு பிரச்சினையும் இல்லாமல் உறிஞ்சக்கூடியமாதிரி கனி உப்புகளான முக்கியமா, சோடியம், பொட்டாசியம், கல்சியம், இரும்பு, மக்னீசியம் எண்டதை பல மடங்காக அதிகரிக்குது எண்டு இப்ப கன பேர் ஆராச்சி செய்து சொல்லுகினம்.

> **“சோத்துப் பானையுக்கை தண்ணியை ஊத்தி மூடி உறியில வைத்தா அடுத்த நாள் காலமையில அது புளிச்சுப்போய் பழஞ்சோறா இருக்கும். இதில முக்கியம் என்னவெண்டால், இலக்டிக் அமில பக்டீரியாக்கள் சோத்தில இருக்கிற ஊட்டச்சத்து எதிர்ப்புக் காரணிகளை சுக்குநூறா உடைச்சு எங்கட உடம்பு ஒரு பிரச்சினையும் இல்லாமல் உறிஞ்சக்கூடியமாதிரி கனி உப்புகளான முக்கியமா, சோடியம், பொட்டாசியம், கல்சியம், இரும்பு, மக்னீசியம் எண்டதை பல மடங்காக அதிகரிக்குது...”**

அதுமட்டுமில்ல உப்பிடி ஊந்த பக்டீரியாக்கள் தாங்கள் வேலை செய்யேக்கை விட்டமின் பி6, பீ12 ஐ உம் எக்கச்சக்கமாக உண்டாக்குதுகள் எண்டினம். அதுமாதிரி உந்த கழுத்தில கிடக்கிற தைரோயிட் சுரப்பி எண்ட சுரப்பிதான் மனுசன்ரை வளர்ச்சியை கட்டுப்படுத்துது. அதோட இன்னும் கன வேலையளை செய்யுது.

உந்தச் சுரப்பி ஒழுங்கா வேலை செய்யேல்லை எண்டால் நாதஸ்வரம் வாசிக்கேக்கை சில வித்துவான்களுக்கு தொண்டை ஒரு பக்கத்தால வீங்கிற மாதிரி வீங்கி இருக்கும். உந்தச் சுரப்பியை ஒழுங்கா வேலை செய்யப் பண்ணுற செலனியம் எண்ட ஒரு சாமானும் பழஞ்சோத்தில இருக்கெண்டு உதைப்



(தொடரும்)

# வரலக்ஷ்மி விரதமும் மகிமையும்



வரலட்சுமி நோன்பு என்பது பதினாறு வகைச் செல்வத்துக்கும் அதிபதியான லட்சுமியின் அருள் வேண்டி கடைப்பிடிக்கப்படும் இந்துக்களின் நோன்பாகும். ஆண்டு தோறும் ஆவணி மாத பௌர்ணமிக்கு முன்னால் வரும் வெள்ளிக்கிழமையில் இந்த வரலக்ஷ்மி பூஜையானது வரும். சில வருடங்களில் ஆடி மாதத்தில் அமையும். இந்த வருடம் ஆடி மாதம் 16ஆம் திகதியான இன்று வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

கணவன் நலத்தோடும், ஆரோக்கியத்தோடும், செல்வத்தோடும் இருக்கவும், தாலி பாக்கியம் நிலைக்கவும், இல்லத்தில் செல்வம் கொழிக்கவும் இந்த நோன்பை சுமங்கலி பெண்கள் கடைப்பிடிக்கின்றனர்.

இந்நாளில் வீட்டைச் சுத்தம் செய்து விளக்கேற்றி வாசனைப் புகையினால் இல்லத்தை நிறைத்து கலசம் ஒன்றில் லட்சுமியை வணங்கித் தொடங்குவர். கலசத்தினுள் பச்சரிசி, எலுமிச்சை, பொற்காசு என்பவற்றை இட்டு கலசத்தைப் பட்டாடையால் அலங்கரித்து, தங்கம், வெள்ளி அல்லது பஞ்ச உலோகங்களினாலான இலட்சுமியின் உருவச்சிலையை அல்லது படத்தை கலசத்திலுள்ள தேங்காயில் வைப்பர். மஞ்சள் கயிற்றை குங்குமத்தில் வைத்துக் கலசத்தில் அணிந்து வரலட்சுமியைக் கிழக்குப் பக்கமாக வைத்து வணங்குவர்.

தீபாராதனை செய்து இனிப்பான பலகாரங்களைப் படைப்பர். பின்னர் கலசத்தில் வைத்த மஞ்சள் கயிற்றை விரதமிருந்தவர் கையில் கட்டுவர். பின்னர் படைக்கப்பட்ட பொருட்களுடன் தாம்பூலம், மஞ்சள், புடவை போன்றவற்றை சுமங்கலிகளுக்கு தானமாகக் கொடுத்து ஆசி பெற்று காலை முதல் உண்ணாநோன்பிருந்ததை முடித்து தாமும் உண்டு விரதத்தை நிறைவேற்றுவர்.

அன்று முழுவதும் அஷ்டலக்ஷ்மி தோத்திரம், லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் செய்வர். மாலை வேளைகளில் உற்றார், சுற்றார் வீடுகளுக்குச்சென்று ஒருவருக்கொருவர் தாம்பூலம் பெற்றுக்கொள்வர்.

இந்த விரதத்தின் மகிமையை தேவர்களோ முனிவர்களோ எடுத்துச் சொல்லவில்லை. யாரை நினைத்து விரதம் மேற்கொள்கிறோமோ அந்த மகாலக்ஷ்மியே விரதத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியிருக்கிறாள்.

மகத நாட்டில் வசித்துவந்த சாருமதி என்னும் பெண் அன்பில் குணவதியாக இருந்தாள். புகுந்தவீட்டில் மாமனார், மாமியாரை பெற்றவர்களுக்கும் மேலாக பாவித்து அவர்களை வணங்கி பணிவிடை செய்துவந்தாள். எத்தருணத்திலும் முகங்கோணாமல் மனம் முழுக்க அன்பை நிரப்பி முகமலர்ந்து வாழ்ந்து வந்த அவளிடம் மகாலக்ஷ்மிக்கும் பிரியம் வந்தது. அவளுடன் வசிக்கவேண்டும் என்னும் எண்ணம் தோன்றியது. சாருமதியின் கனவில் தோன்றிய மகாலக்ஷ்மி என்னை நினைத்து வரலக்ஷ்மி விரதம் கடைப்பிடிப்பவர்களது இல்லத்தில் நான் வசிப்பேன் என்று விரதத்துக்கான வழிமுறையையும் கற்றுக்கொடுத்தாள்.

மறுநாள் காலை சாருமதிக்கு இரவு லக்ஷ்மிதேவி கனவில் வந்து கற்றுக்கொடுத்த விரதமுறை நினைவுக்கு வந்தது. லக்ஷ்மிதேவி கூறியபடி விரதம் இருந்தாள். இதனால் மேலும் பல நன்மைகளை அடைந்தாள். லஷ்மிதேவி அருளிய நன்மைகளை பிறரிடம் எடுத்துச்சொல்லி அவர்களையும் விரதம் கடைப்பிடிக்க வலியுறுத்தினாள். அவளது வேண்டுகோளுக்கேற்ப வரலக்ஷ்மி விரதம் கடைப்பிடிக்க தொடங்கிய பெண்களின் வாழ்விலும் நன்மைகள் மலர்ந்தன.

# அப்துல்கலாம் நினைவேந்தல்








கிளிநொச்சியில் அப்துல்கலாம் நினைவேந்தல் நாளில் சேவைகள் அக்கினி சிறகுகள் சமூக அறக்கட்டளை நிறுவனத்தின் இலங்கையின் தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் டொக்டர் சிறிமான் மற்றும் கனகராயன் குளம் தலைமையாசிரியர் தலைமையில் அப்துல் கலாமின் ஒருநாள் மாணவரும் இளம் தன்னம்பிக்கை பேச்சாளரும் வெற்றி அக்னி சிறகுகள் சமூக அறக்கட்டளை மற்றும் உலகளாவிய கலாம் அறக்கட்டளையின் நிறுவனத் தலைவருமான டொக்டர் கே.எம். செந்தூர் பாண்டியன் மற்றும் அப்துல் கலாம் பசுமை திட்டத்தின் அதிகாரி **Universal Chief Brand Officer Actor Sathya SK** இன் வழிகாட்டுதலின்படியும் மேலும் அறக்கட்டளையின் தலைவர் அபிலாஷ் முதன்மை நிர்வாக அதிகாரி டொக்டர் கலையரனின் வழிகாட்டுதல்படியும் கிளிநொச்சி பகுதியில் கிளி/திருவையாறு பாடசாலையில் தலைமையாசிரியர் ம.வி. பத்மநாதன் சிறீதரனை தொடர்புகொண்டு அந்த பாடசாலை பற்றிய விபரங்களை கேட்டறிந்ததோடு, அங்கே மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன.




அத்தோடு சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்திலும் தலைமையாசியர் பெருமாள் கணேசனோடு தொடர்புகொண்டு மரக்கன்றுகள் நாட்டிவைக் கப்பட்டன.



அன்பு சிறுவர் இல்லத்திற்கு உணவு வழங்கப்பட்ட துடன், அவர்களுக்கான தேவைகள் பற்றிய கலந்துரையாடலும் இடம்பெற்றது.

அதேவேளை, கனகாம்பிகைக்குளம் எனும் இடத்தில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் விளையாட்டுப் போட்டியும் நடத்தப்பட்டு வெற்றிக்கேடயங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# எங்களுக்கு சாத்தியப்படாது

## – வெளிப்படையாக கூறிய ஹோல்டர்



கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக புதிதாக பாதுகாப்பு வலயம் உருவாக்கப்பட்டுள்ளதன் காரணமாக (மேற்கிந்திய தீவுகள்) தொடர்களை நடத்த எங்களுக்கு சாத்தியப்படாது என மேற்கிந்திய தீவுகள் அணித்தலைவர் ஜேசன் ஹோல்டர் வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு மத்தியில் 117 நாட்களின் பின்னர் இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் முயற்சியினால் மீண்டும் சர்வதேச கிரிக்கெட் போட்டி ஆரம்பமானது. கொரோனா வைரஸ் சவாலுக்கு மத்தியில் தனிமைப்படுத்தல் போன்ற பல சவால்களுக்கு மத்தியில் நடைபெற்ற குறித்த தொடரில் இங்கிலாந்து அணி 2-1 என்ற அடிப்படையில் தொடரை கைப்பற்றியது.

குறித்த தொடரில் வீரர்களின் பாதுகாப்புக் கருதி உயிர் பாதுகாப்பு வலயம் இங்கிலாந்து கிரிக்கெட் சபையால் உருவாக்கப்பட்டது. இதனால் வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் மைதானத்தைவிட்டு வெளியேற முடியாது. இந்நிலையில், இங்கிலாந்து கிரிக்கெட் சபை வசதியான பணம்படைத்த கிரிக்கெட் சபை என்ற காரணத்தினாலும், மைதானத்திற்கு அருகில் ஹோட்டல் வசதிகள் காணப்படுவதாலும்தான் இவ்வாறு பாதுகாப்பு வலயத்தை உருவாக்கி அடுத்தடுத்து அயர்லாந்து, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா அணிகளுடன் தொடர்களை நடத்த முடிகிறது என ஹோல்டர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எங்களைபோன்று சிறிய கிரிக்கெட் சபைகளினால் இதுபோன்று பாதுகாப்பு வலயங்களை உருவாக்கி தொடர்களை நடத்த முடியாது என மேற்கிந்திய தீவுகள் அணித்தலைவர் ஜேசன் ஹோல்டர் வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்த அவர், கொரோனா தொற்றுக்கு முன்னர் கூட இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய மூன்று அணிகளுக்குத்தான் வருமானம் அதிகமாக கிடைக்கும். இந்த மூன்று அணிகளுக்கு எதிராக போட்டிகளை நடத்துவதில் கிடைக்கும் வருமானம்தான் எங்களை மிகப்பெரிய அளவில் சார்ந்திருந்தது எனத் தெரிவித்துள்ளார்.

# மாற்றமெதுவுமின்றி பாகிஸ்தான் முதல் டெஸ்டுக்கான குழாத்தை அறிவித்த இங்கிலாந்து

மேற்கிந்திய தீவுகள் அணியுடனான தொடரை வெற்றியுடன் நிறைவுசெய்த இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்தாக டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணியுடன் மூன்று போட்டிகளில் விளையாடவுள்ளது. இதற்கான இங்கிலாந்து அணியின் முதல் டெஸ்ட் போட்டிக்கான குழாம் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

மேற்கிந்திய தீவுகள் அணியுடன் நடைபெற்ற இறுதி டெஸ்ட் போட்டிக்காக வெளியிடப்பட்ட அதே 14 வீரர்கள்கொண்ட குழாம் மாற்றமெதுவுமின்றி பாகிஸ்தான் முதல் டெஸ்ட் தொடருக்காக பெயரிடப்பட்டது.

கொரோனா வைரஸ் சவாலுக்கு மத்தியில் இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் முயற்சியினால் நடைபெறுகின்ற குறித்த டெஸ்ட் தொடர் இரசிகர்களின்றிய மூடிய மைதானத்தில் நடைபெறவுள்ளதுடன், வீரர்களின் பாதுகாப்புக் கருதி உயிர் பாதுகாப்பு வலயமும் உருவாக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்ட முதல் டெஸ்ட் போட்டிக்கான குழாத்தின் அடிப்படையில் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவர் ஜோ ரூட் தொடர்ந்தும் செயற்படவுள்ளார். அவருடன் ஜேம்ஸ் அண்டர்சன், ஜொப்ரா ஆர்ச்சர், டொம் பெஸ், ஸ்டுவர்ட் ப்ரோட், ரோரி பேன்ஸ், ஜொஸ் பட்லர், ஷக் க்ரெளலி, சாம் கரன், ஒல்லி போப், டொம் சிப்லே, பென் ஸ்டோக்ஸ், கிறிஸ் வோக்ஸ் மற்றும் மார்க் வூட் ஆகிய வீரர்கள் குழாத்தில் இடம்பெற்றுள்ளனர்.



மேலும் குழாத்தில் மேலதிக வீரர்களாக ஜேம்ஸ் ப்ரேஸி, பென் போக்ஸ், ஜெக் லீச் மற்றும் டான் லோரன்ஸ் ஆகிய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இங்கிலாந்து – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 5ஆம் திகதி ஓல்ட் ட்ரபெட்டில் நடைபெறவுள்ளது.




# மூன்று ஆண்டுகள் தடை 18 மாதங்களாக குறைப்பு

## மீண்டும் மேன்முறையீடு செய்வேன் என்கிறார் உமர் அக்மல்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர் உமர் அக்மலுக்கு விதிக்கப்பட்ட மூன்று ஆண்டுகள் தடையானது உமர் அக்மலின் மேன்முறையீட்டின் மூலம் 18 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பமான நிலையில், கொரோனா வைரஸால் இடைநிறுத்தப்பட்ட பாகிஸ்தான் சூப்பர் லீக் தொடரின்போது சூதாட்ட தரகர்கள் தொடர்புகொண்டு சூதாட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் கூறியதை உமர் அக்மல் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு தெரிவிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவினர் நடத்திய விசாரணையின்போது சூதாட்ட தரகர்கள் தன்னை இரண்டு தடவைகள் அணுகியதை உமர் அக்மல் ஒப்புக்கொண்டார். இதன் காரணமாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையானது கடந்த ஏப்ரல் மாதம் உமர் அக்மலுக்கு 3 ஆண்டுகள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட தடை விதித்து நடவடிக்கை எடுத்தது.



இந்நிலையில், குறித்த தடையை எதிர்த்து உமர் அக்மல் மேன்முறையீடு செய்தார். இந்த மனுவை விசாரணைசெய்த ஓய்வுபெற்ற நீதிபதி பாகிர் முகமது கோக்ஹர், 3 ஆண்டு கால தடையை 18 மாதங்களாக குறைத்து உத்தரவிட்டார். கருணையின் அடிப்படையிலேயே இந்தத் தண்டனை குறைப்பு செய்யப்பட்டு இருப்பதாக நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து உமர் அக்மல் குறிப்பிடுகையில், எனக்கு முன்னர் பல வீரர்கள் இதுபோன்ற சூதாட்ட புகாரில் சிக்கியிருக்கிறார்கள். ஆனால், யாருக்கும் என்னைபோல் கடுமையான தண்டனை அளிக்கப்படவில்லை. எனது தண்டனையை மேலும் குறைக்கவேண்டுமென மீண்டும் மேன்முறையீடு செய்வேன் எனத் தெரிவித்தார்.




# பூப்பந்தாட்ட தொடர்களை ஒத்திவைத்தது உலக பூப்பந்தாட்ட கூட்டமைப்பு

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருந்த நான்கு பூப்பந்தாட்ட தொடர்கள் ஒத்திவைக்கப்படுவதாக உலக பூப்பந்தாட்ட கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பூப்பந்தாட்ட கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கிடையில் இணையவழி மூலம் நடைபெற்ற கூட்டத்தில் குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் உலக பூப்பந்தாட்ட கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் தோமஸ் லாண்ட் இவ்வாறு தெரிவித்தார்.

எந்தவொரு பூப்பந்தாட்டப் போட்டியும் உலக சுகாதார அமைப்பு, உள்ளூர் சுகாதார அமைப்புகளின் கட்டுப்பாடுகள், சர்வதேச மற்றும் உள்ளூர்ப் பயணக் கட்டுப்பாட்டு விதிகள் ஆகியவற்றுக்கு இணக்கமான சூழல் ஏற்படும் வரை போட்டிகளை தள்ளிவைப்பதை தவிர்க்க முடியாது. வீரர்கள், இரசிகர்கள், தன்னார்வலர்கள் மற்றும் சங்க நிர்வாகிகள் ஆகியோரின் நலனைக் கருத்திற்கொண்டு இதுபோன்ற முடிவுகளை எடுக்கவேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

செப்டெம்பர் 1 முதல் 6 வரை நடைபெறவிருந்த தைபே ஓபன், செப்டெம்பர் 8 முதல் 13 வரை நடைபெறவிருந்த கொரிய ஓபன், செப்டெம்பர் 15 முதல் 20 வரை நடைபெறவிருந்த சீன ஓபன் மற்றும் செப்டெம்பர் 22 முதல் 27 வரை நடைபெறவிருந்த ஜப்பான் ஓபன் ஆகிய பூப்பந்தாட்டத் தொடர்கள் இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

# நான்கு வருடங்களின் பின்னர் மீண்டும் மூன்றாமிடத்தில் ஸ்டுவர்ட் ப்ரோட்

மேற்கிந்திய தீவுகள் அணியுடனான இறுதி டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்டுகளை வீழ்த்திய இங்கிலாந்து அணியின் அனுபவ வேகப்பந்துவீச்சாளர் ஸ்டுவர்ட் ப்ரோட் புதிய டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் மூன்றாமிடத்தைப் பிடித்துள்ளார்.

சுற்றுலா மேற்கிந்திய தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடர் நிறைவுக்கு வந்ததன் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் பேரவை புதிய டெஸ்ட் தரவரிசையை வெளியிட்டது.

ஸ்டுவர்ட் ப்ரோட் மூன்றாவது டெஸ்ட் போட்டியின்போது 10 விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் புதிய டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் 7 நிலைகள் உயர்ந்து 823 தரவரிசை புள்ளிகளுடன் மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளார். இதேவேளை, 2016 ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் ஸ்டுவர்ட் ப்ரோட் மீண்டும் நான்கு வருடங்களின் பின்னர் மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளார்.



மேலும், துடுப்பாட்டத்திலும் தனது திறமையை வெளிப்படுத்திய ஸ்டுவர்ட் ப்ரோட் ஏழு நிலைகள் உயர்ந்துள்ளதுடன், டெஸ்ட் சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையிலும் மூன்று நிலைகள் உயர்ந்து 11ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

Sri Lanka's National Newspaper
the sunday morning
இந்த வார இறுதியில்...
இலங்கை பொதுஜன முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரண்டு புதியவர்களுக்கு இடையில் கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டுள்ளது.

www.themorning.lk
வார இறுதியில் சகல அரசியல் மற்றும் ஏனைய செய்திகளை பக்கச்சார்பின்றி ஆராய்ந்து வெளியிடும் புதிய உதயம். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் உங்கள் கரங்களில்...




இஸ்லாமிய வசந்தம் பகுதியில் கட்டுரை, கவிதை, வரலாறு, பொது அறிவு, கல்வி போன்ற அனைத்து ஆக்கங்களையும் மாணவர்கள், கல்விமான்கள், மௌலவிமார்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் அனுப்பிவைக்க முடியும். ஆக்கங்களை அனுப்பும்போது கணினி தட்டச்சு செய்யப்பட்ட ஒரு A4 பக்கத்துக்கு கூடாமல் தட்டச்சு செய்து அனுப்பவேண்டும். கையெழுத்துப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
உங்களது ஆக்கங்களை
**islamiyawasantham@gmail.com**
எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.
தொடர்புகளுக்கு: 011 52000210

## பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து

# உழ்ஹிய்யாவுடன் ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்

**பு**னித ஹஜ் கடமையானது இஸ்லாத்தில் ஐந்தாவது கடமையாகும். வசதி படைத்த உடல் ஆரோக்கியமுள்ள செல்வந்தர்களுக்கு கடமையாக்கப்பட்டுள்ளது. சக்தியிருந்தும் புனித ஹஜ்ஜை நிறைவேற்றாமலிருப்பது பெரும் குற்றமாகும்.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும்போது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண் முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், கஃபாவை வலம் வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம் நிரம்பிய ஸம்ஸம் நீர் அருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்து கிரியைகளிலும் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகம் பிரதிபலிக்கின்றது.

ஹஜ்ஜுக்கான ஒன்றுகூடல், முஸ்லிம் உம்மத்தின் ஐக்கிய உணர்வை பறைசாற்றும் சர்வதேச அளவிலான வருடாந்த மாநாடாக கணிக்கப்படுகிறது. தொழுகையில் ஆரம்பிக்கும் முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஹஜ் ஒன்றுகூடலில் மேலும் வலுப்பெறுகிறது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன் வாழ்ந்த ஜாஹிலிய்யா காலத்து மக்கள்கூட இவ்வழிபாட்டில் ஈடுபட்டுவந்தனர். இணைவைப்போடு மூடநம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் நிறைந்த ஒரு வழிபாடாகவே இது இருந்துவந்தது. இது ஒரு வழிபாடு என்பதைவிடவும் அரேபிய தீபகற்ப மக்கள் ஒன்றுகூடும் வியாபாரச் சந்தையாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பின் இந்நிலை முற்றாக மாற்றப்பட்டு வருடாந்தம் ஒன்றுகூடும் சர்வதேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப்பெற்றது.

அல்லாஹ்வின் கட்டளையை இதயத்தில் இறுக்கமாய் கொண்டு, எத்தனையோ காலங்களாக தமக்கொரு பிள்ளை இல்லையென ஏங்கித் தவித்து இன்னல் பல கண்டு இறுதியில் அன்புடனும் ஆசையுடனும் பெற்றெடுத்த அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்வுக்காக பலியிடத் துணிந்த இப்ராஹீம் (அலை) அவர்களின் உயர்வான, ஒப்பற்ற மனதையும், ஒரு மாபெரும் தத்துவத்தையும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு நினைவூட்டிக்கொண்டிருக்கின்றது.

புனித ஹஜ் பெருநாள் தினத்திலும் அதைத் தொடர்ந்துவரும் துல்ஹஜ் மாதம் பிறை 11, 12, 13 ஆகிய தினங்களிலும் வசதியுள்ள ஒரு முஸ்லிம் நிறைவேற்றும் மிகச் சிறந்த வணக்கமே உழ்ஹிய்யா (குர்பான்) கொடுப்பதாகும். ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற மிருகங்களை அறுத்து தானும் உண்டு, பிறருக்கும் புசிக்கக் கொடுத்து அல்லாஹ்வின் அன்பைப் பெறும் நற்செயலே உழ்ஹிய்யா ஆகும்.




ஸகாத் கொடுப்பவர்கள்தான் உழ்ஹிய்யா கொடுக்கவேண்டும் என்ற அவசியம் கிடையாது. வசதியுள்ளவர்கள் அனைவரும் கொடுக்க வேண்டும். ஒட்டகம் அல்லது மாடாக இருந்தால் ஏழு பேர் சேர்ந்து கூட்டாக கொடுக்கலாம். இது ஆண்களுக்கு மட்டும்தான் என்பதில்லை. பெண்களும் தாராளமாக இதில் பங்கேற்கலாம்.

உழ்ஹிய்யா கொடுப்பவரே அறுப்பது மிகவும் சிறந்தது. அப்படியில்லையென்றால் வேறொருவருக்குப் பொறுப்புக் கொடுக்கவும் முடியும். அவர் அந்த இடத்திற்கு சமுகமளிப்பது சிறந்தது. தைரியமிருந்தால் பெண்களும் அறுக்கலாம். அறுப்பதற்கு முன் அல்லாஹ்வின் பெயர் சொல்லப்பட வேண்டும். நாம் அறுக்கின்றபோது "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என்று கூறவேண்டும்.

"உங்களில் ஒருவர் உழ்ஹிய்யா கொடுக்க எண்ணியிருக்கின்ற நிலையில், துல்ஹஜ் மாதம் பிறந்ததும் நகம், முடி எதையும் வெட்ட வேண்டாம்" (முஸ்லிம்). ஒருவர் உழ்ஹிய்யா கொடுக்க எண்ணியிருக்கும் நிலையில், நகம் அல்லது முடி ஏதாவது ஒன்றை வெட்டினால் அவர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்டுக்கொள்ளவேண்டும்.

உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்றுகையில், பிற சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை பாழ்படுத்தாத வகையில் அதை நிறைவேற்றுவது முக்கிய அம்சமாகும். நம் மதக் கிரியைகளை நிறைவேற்றும்போது பிற மதத்தினரின் அதிருப்தியைச் சம்பாதித்துக்கொள்வது நல்லதல்ல.

மிருகங்களை அறுப்பதற்கும் இறைச்சியைப் பெற்றுகொண்டு சுற்றாடலுக்கு மாசு ஏற்படாத வகையில் கழிவுப்பொருட்களை சுத்தப்படுத்துவதற்கும் போதிய இடவசதி இருக்கும்வரை இந்த நடைமுறையில் பிரச்சினைகள் தலைதுக்குவதில்லை. பல்லின மக்களும் கலந்துவாழும், இடப்பற்றாக்குறை நெருக்கடிமிக்க பகுதிகளில் மிருகங்களை அறுப்பதும், அவற்றின் கழிவுகளை அப்புறப்படுத்துவதும் சர்ச்சைக்குரியனவாகின்றன.

இறைவனால் ஆகுமாக்கப்பட மிருகத்தை அறுத்து உண்பதில் எந்தத் தவறும் கிடையாது. உழ்ஹிய்யா கொடுக்கும் விடயத்தில் பல்லின மக்கள் வாழும் எமது நாட்டில் பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடக்கவேண்டும் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மிருகங்களை அறுப்பதற்காக கொண்டுசெல்லும்போது அதற்கு வதை செய்வதோ, அறுத்ததன் பின் இரத்தம் வடியும் நிலையில், பாதைகளில் இறைச்சியைத் தூக்கிச் செல்வதோ கூடாது. அறுத்த பிராணியின் கழிவுகளான தோல், எலும்புகள், கொம்பு, சாணம் போன்றவற்றை துர்நாற்றம் வீசும் நிலையில் பாதையோரங்களில் வீசுவதை முற்றிலும் தவிர்க்கவேண்டும்.

உழ்ஹிய்யா கொடுக்கும் ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயற்படுவது கட்டாயக் கடமையாகும். எமது நாட்டின் இறைச்சிக் கடைகள் தொடர்பான உள்ளூராட்சி அமைப்புகளுக்கான கட்டளைச் சட்டம் அமுலில் உள்ளது.

அதன்பிரகாரம் கால்நடைகள் பாதுகாப்பான மடுவங்களிலேயே அறுக்கப்படவேண்டும் என்ற நியதியும் உண்டு. உழ்ஹிய்யாவின் பொருட்டு மிருகங்களை அறுப்பதற்காக பிரதேச உள்ளூராட்சி அமைப்புகளின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி, அதற்காக செலுத்தவேண்டிய சிறு கட்டணங்களையும் செலுத்தி, பாதுகாப்பான முறையில், சுற்றாடலுக்கும் சுற்றாடலிலுள்ள பிற சமூகத்தவர்களுக்கும் தொந்தரவில்லாதவாறு இக்கடமையை நாம் நிறைவேற்ற வேண்டும்.


இறைச்சிக்காக ஆடு, மாடுகள் அறுக்கப்படுவது எமது நாட்டு சட்டத்தால் தடுக்கப்பட்டதல்ல என்பதை மாற்று மதத்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒருவருக்கு இருக்கும் உரிமைகளும் மத, கலாசாரக் கொள்கைச் சுதந்திரங்களும் இன்னும் ஒருவருக்கு இடைஞ்சலாக இருக்கமுடியாது என்பது ஜனநாயக தத்துவங்களில் ஒன்றாகும். இதை அல்லாஹ்தான் அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும்.

எமது நாட்டில் உழ்ஹிய்யா சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் நிம்மதியாகவும் மன சந்தோ....த்துடனும் உழ்ஹிய்யா கொடுக்கும் நிலைமை ஏற்படவேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்திப்போம்

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாம் பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து புரிந்துணர்வுடன் உழ்ஹிய்யா கொடுத்து புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம். அசாதாரன சூழ்நிலையில் கொண்டாடப்படும் இந்தப் பெருநாள் கொண்டாட்டங்களை சுகாதார அதிகாரிகளின் விதிகளை மீறாதவாறு கொண்டாட எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக!

**பரீட் இக்பால்,**
**(யாழ்ப்பாணம்)**




## அண்ணலாரின் அருள் வாக்கு...

**'உங்களில் ஒருவரின் வாசலில் ஆறு ஒன்று (ஓடிக் கொண்டு) இருக்கிறது. அதில் அவர் தினமும் ஐந்து முறை குளிக்கிறார். அவரின் மேனியிலுள்ள அழுக்குகளில் எதுவும் எஞ்சியிருக்குமா? எனக் கூறுங்கள்' என்று தோழர்களிடம் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். 'அவரின் அழுக்குகளில் சிறிதளவும் எஞ்சியிராது' என நபித் தோழர்கள் கூறினர். 'இது ஐவேளைத் தொழுகைகளின் உவமையாகும். இதன் மூலம் அல்லாஹ் பாவங்களை அகற்றுகிறான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி)
ஆதாரம்: புஹாரி

# இறுதித்தூதரின் இறுதிப்பேருரை!

**(கடந்த வாரத் தொடர்ச்சி...)**

**சொர்க்கம் செல்ல இதுதான் வழி!**

உங்கள் இறைவனையே வணங்குங்கள். உங்கள் இறைவனுக்கே பயந்துகொள்ளுங்கள் கடமையான ஐவேளைத் தொழுகைகளையும் தவறாது பேணுங்கள். (ரமழானில்) நோன்பு நோற்று வாருங்கள். விருப்பமுடன் ஸகாத் கொடுத்துவிடுங்கள். அல்லாஹ்வின் இல்லத்தை ஹஜ் செய்யுங்கள். உங்களில் அதிகாரம் உடையோருக்குக் கட்டுப்பட்டு நடங்கள். நீங்கள் சொர்க்கம் செல்வீர்கள்!

**இறை ஏற்பாட்டை மாற்றாதீர்!**

(மாதத்தின் நாட்களை தன் இஷ்டப்படி) முன் பின்னாக்குவதெல்லாம் இறை நிராகரிப்பை அதிகரிக்கும் செயலாகும். ஆதலால் நிராகரிப்பவர்கள்தான் வழிகெடுக்கப்படுகிறார்கள். ஏனென்றால், அவர்கள் தங்கள் இஷ்டப்படி மாதங்களை முன் பின்னாக்கி ஓர் ஆண்டில் அம்மாதங்களில் போர் புரிவதை ஆகுமாக்கிக்கொள்கிறார்கள்.

மற்றோர் ஆண்டில் அதே மாதங்களில் போர் புரிவது கூடாது என்று தடுத்துவிடுகிறார்கள். இவ்வாறு அவர்கள் செயவதன் நோக்கமெல்லாம் தாங்கள் தடுத்திருக்கும் மாதங்களின் எண்ணிக்கையை அல்லாஹ் தடுத்திருக்கும் மாதங்களின் எண்ணிக்கைக்குச் சரியாக்கி, அல்லாஹ் தடுத்திருக்கும் மாதங்களையும் தாங்கள் ஆகுமாக்கிக் கொள்வதற்குத்தான்.

அறிந்துகொள்ளுங்கள்: நிச்சயமாக காலம், வானங்களையும் பூமியையும் அல்லாஹ் படைத்த அன்றிருந்த அதன் அமைப்பைப்போன்றே, இப்போதும் சுற்றிவருகின்றது. அல்லாஹ்விடத்தில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டாகும். இப்படித்தான் வானங்களையும் பூமியையும் அல்லாஹ் படைத்த அன்று, அவனது புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு மாதங்கள் சங்கைக்குரியன. மூன்று, தொடர்ந்து வருபவை. அவை துல்ஹதா, துல்ஹஜ், முஹர்ரம், நான்காவது ஜுமாதல் உலாவிற்கும் அபானிற்கும் இடையிலுள்ள ரஜப் ஆகும்.

**சகோதரம் பேணுவீர்!**

ஒவ்வொரு முஸ்லிமும் மற்ற முஸ்லிமுக்குச் சகோதரர் ஆவார். முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்களே! ஒரு முஸ்லிமின் பொருள் பிறருக்கு அறவே ஆகுமானதல்ல. மனமுவந்து கொடுத்தாலே தவிர! உங்களுக்கு நீங்கள் அநீதம் இழைத்துக்கொள்ளாதீர்கள்.

**குற்றவாளியே தண்டிக்கபடுவார்!**

ஒருவர் குற்றம் செய்தால் அதற்கான தண்டனை அவருக்கே கொடுப்படும். மகனுடைய குற்றத்திற்காக தந்தையோ, தந்தையின் குற்றத்திற்காக மகனோ தண்டிக்கப்படமாட்டார்.

**இஸ்லாம் முழுமையாகிவிட்டது!**

ஒவ்வோரு இறைத்தூதரின் பிரார்த்தனையும் (இவ்வுலகிலேயே) முடிந்துவிட்டன் என் பிரார்த்தனையைத் தவிர! நான் அதை மறுமை நாளுக்காக என் இறைவனிடம் சேமித்து வைத்திருக்கிறேன். அறிந்துகொள்ளுங்கள் மறுமை நாளில் இறைத்தூதர்கள் தங்களது சமுதாயத்தினர் அதிகமாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுறுவார்கள். அப்போது என்னை நீங்கள் கேவலப்படுத்திவிடாதீர்கள். நான் உங்களுக்காக கவ்ஸர் நீர்த் தடாகத்திற்கு அருகில் உட்கார்ந்திருப்பேன்.

மக்களே! எனக்குப் பின் எந்தவோர் இறைத்தூதரும் இல்லை. உங்களுக்குப்பின் எந்தவொரு சமுதாயமும் இல்லை.

இங்கு வந்திருப்பவர்கள், வராதவர்களுக்கு இந்த வழிகாட்டல்களை எடுத்துச் சொல்லட்டும். விடயம் சென்று சேருபவர்களில் சிலர், நேரடியாக கேட்பவரைவிட நன்கு ஆராயும் தன்மை உடையவராக இருக்கலாம்.

பிறகு நபி (ஸல்) அவர்கள் மக்களை நோக்கி, "மறுமை நாளில் உங்களிடம் என்னைப் பற்றி விசாரிக்கப்படும்போது நீங்கள் என்ன சொல்வீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், "நீங்கள் (மார்க்க போதனைகள் அனைத்தையும் எங்களிடம்) தெரிவித்து விட்டீர்கள் (உங்களது தூதுத்துவப் பொறுப்பை) நீங்கள் நிறைவேற்றிவிட்டீர்கள் (சமுதாயத்திற்கு) நன்மையை நாடினீர்கள் என நாங்கள் சாட்சியம் அளிப்போம்" என்றார்கள். உடனே அல்லாஹ்வின் தூதர் அவர்கள், தமது ஆட்காட்டி விரலை வானை நோக்கி உயர்த்தி சைகை செய்துவிட்டுப் பிறகு, அதை மக்களை நோக்கித் தாழ்த்தி, "இறைவா! இதற்கு நீயே சாட்சி! இறைவா! இதற்கு நீயே சாட்சி! இறைவா! இதற்கு நீயே சாட்சி!" என்று முடித்தார்கள்.

இவ்வாறு அவர்கள் கூறிய அதே இடத்தில் அல்லாஹ்வின் புறத்திலிருந்து கீழ்வருமாறு இறை வசனம் இறங்கியது: இன்றைய தினம் உங்களுக்காக உங்களுடைய மார்க்கத்தை முழுமையாக்கி விட்டேன் மேலும், நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன் இன்னும், உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே தேர்ந்தெடுத்துக் கொண்டேன். (அங்கீகரித்துக் கொண்டேன்.)"



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7